விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 185 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை (22.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி
# ‘அணையா விளக்கு’ போராட்டம்

## யாழ்ப்பாணம் வரும் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை “அணையா விளக்கு” போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வருகை தரும் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் குறித்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (06ஆம் பக்கம் பார்க்க)

ஐஸ் போதையுடன்

## நாவாந்துறையில் பெண் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் 440 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவரும் பெண்ணொருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்

03ஆம் பக்கம் பார்க்க

• அரசியல் கட்டுரைகள்
• ஆலடி மாநாடு
• வியாசர் பதில்கள்
• கவிதைக் கலசம்
இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம்
உள்ளே...

வலிகாமம் வடக்கில்

## 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலுள்ள 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரிய தொடர் போராட்டம் மயிலிட்டி சந்தியில் நேற்றுச் சனிக்கிழமை

04ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா உயர்ஸ்தானிகர் நாளை இலங்கை விஜயம்

### யாழ்ப்பாணமும் வருகை தருவார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் நாளை 23ஆம் திகதி இலங்கை விஜயம் செய்யவுள்ளார்.

அவர் தனது விஜயத்தின்போது 04ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழி

## அரசியல் இலாபம் தேட தமிழ்த் தரப்பினர் முயற்சி

### சரத் வீரசேகர



(கொழும்பு)

யாழ்.செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம்

03ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசு எரிபொருள் மாபியாவை முன்னெடுத்துச் செல்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அநுர அரசாங்கம் எரிபொருள் மாபியாவை முன்னெடுத்துச் செல்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று வெளியிட்ட விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவித்துள்ளதாவது, 03ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த 33 வயதான 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் எரிவாயு சிலிண்டர் ஏற்றிய வாகனமும்

03ஆம் பக்கம் பார்க்க

உடுப்பிட்டியில்

## ஹண்டர் மோதியதில் ஒருவர் பலி

(கரணவாய்)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அரு

23ஆம் பக்கம் பார்க்க

## யாழில் வாள்வெட்டுடன் தொடர்புடைய மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக

03ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் 2 பரப்பு காணியில் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(4601)

**070 766 9770**

## காணி விற்பனைக்கு

நிலாவரைக்கு அண்மையில் 75 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :

(4593)

**077 082 1010**

## வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதியில் சகல வசதியுடனும் அமைந்துள்ள மேல் வீடு வாடகைக்கு விடப்படும்.

(4611)

**076 882 8694**
**077 411 8851**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மணமகள் தேவை

யாழ். இந்து, 31 வயது திருவோண நட்சத்திரம், கனடாவில் மெக்கானிக் எஞ்சினியராக (MSc) பணியாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு :

(1250)

**077 050 1434**
**077 148 1960**

## Win Repair

**மீண்டும் புதுப்பொலிவுடன் ...**

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம். விசேட விலைக்கழிவுகள் உண்டு.

தொடர்புகளுக்கு :

(4603)

**076 834 6136**

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Typing , Photocopy | : 0720789399 |
| கைவினை கலைஞர் | : 0767781004 |
| Student Visa Representative | : 0772155933 |
| சுத்திகரிப்பாளர் | : 0777803203 |
| Sales & Marketing | : 0743433127 |
| Delivery rider(Jaffna,Vavuniya,Kilinochchi,Trinco) | : 0761413416 |
| Speech & Language Therapist | : 0775571950 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | : 0763453485 |
| பகுதி நேர வேலைவாய்ப்பு | : 0755489898 |
| Marketing Manager | : 0775085847 |
| Electrician | : 0763453485 |
| Computer Operator | : 0766273710 |
| பெண் ஊழியர்கள் | : 0775950455 |
| Sales Manager(Basic 90,000) | : 0770079053 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்பில் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: **dewmasweb.com**
வேலையாட்கள் தேவையா : **0760984532**
**DEWMAS**, 51, Amman Road, Nallur

(4602)

## வேலையாள் தேவை

திருமுறிகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு தங்கி நின்று வேலைசெய்ய (சமையல்,றொட்டி) வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

(1249)

**077 993 0280**

## வாடகைக்கு

மருத்துவ மாணவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான அறைகளுடன் கூடிய வீடு யாழ். நகரத்தில் வாடகைக்குண்டு.
குறிப்பு : பெண்கள் மட்டும்

(4609)

தொடர்புகளுக்கு : **077 711 0015**

ஈ•ழ நல்லூர்

## ஸ்ரீதேவி வில்லிசைக்குழு

இயக்குனர் கலைமாமணி, வில்லிசைச் சக்கரவர்த்தி டாக்டர் சாம்பசிவஸ்ரீ சோமாஸ்கந்த குருஜி அவர்கள் கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். உங்கள் ஆலய உற்சவங்கள், கலைவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பல்சுவை நகைச் சுவையுடன் வில்லுப்பாட்டு நிகழ்வுகளைக் காண அழைத்து மகிழுங்கள்.

**13.07.2025 வரை**

(4604)

தொடர்புகளுக்கு : **075 041 0216**

## மணமகன் தேவை

1990 ஆம் ஆண்டு பிறந்த, இந்து, ரோகிணி நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற MSc(Computer Science ) படித்த மணமகளுக்கு கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற 5 - 6 வயது வித்தியாசத்தில் மணமகன் தேவை.
(இந்தியாவில் வசிப்போரும் விரும்பத்தக்கது)

(4607)

**076 667 4608**
**Whatsapp: 076 149 2546**

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

(4615)

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)**
**077 138 7596, 071 999 9306**

## Uber உடன் பதிவு செய்யவும்

Affiliate North

உலகளவில் 70 நாடுகள் மற்றும் 10,500 நகரங்கள்


**எங்களுடன் இணைவதன் நன்மைகள்....**

- அனைத்து வாகனங்களுக்கும் இலவச பதிவு
- மாதந்தோறும் ரூ.200,000/- சம்பாதிக்கவும்
- ஒவ்வொரு ஓட்டுநருக்கும் ஒவ்வொரு வாரமும் ஊக்கத்தொகை
- நீங்கள் எந்த நெட்வொர்க்கையும் பயன்படுத்தி பயன் பெறலாம்.

**பதிவு செய்வதற்கான ஆவணங்கள்....**

@ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இருபுறமும் புகைப்படம்
@ ஓட்டுநர் Selfie புகைப்படம் | @ வாகன வருவாய் உரிமம்
@ வாகன காப்பீடு | @ வாகனப் பதிவு புத்தக நகல்

0707555755 | 0705002051




(4599)

Uber Jaffna Office : இல.197 B, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்
0705002051 | 0705002052 | 0705002053 | 0706123125

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேந்திரம் ருக்மணி



பிறப்பு 17.11.1941 இறப்பு 20.06.2025

மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் ருக்மணி அவர்கள் நேற்று முன்தினம் (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தெய்வயானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நாகேந்திரம் (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் சொரூபன், திவ்வியரூபன், லிங்கரூபன், உமையாள், கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌசல்யா, ஸ்ரீகௌரிக்கா, விக்னகுமார், துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லக்சாயினி, மதுசாயினி, கிராயினி, கௌரூபன், கௌசாயினி, துவியன், கனிஸ்டன், கரிநிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரத்தியாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 690 7569

(4597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணங்கள் ஏதுமின்றி 30 கைதிகள் விடுவிப்பு

## விசாரணையில் வெளியான தகவல்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்திய விசாரணைகளில் எந்தவித ஆவணங்களும் இன்றி 30 கைதிகள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

பொது மன்னிப்பை சட்டவிரோத மாகப் பயன்படுத்தி சிறைக் கைதிகளை விடுவிப்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்தது. இந்நிலையில், சிறைச்சாலைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறைக் கைதிகள் குழு பல்வேறு பிரிவுகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளதாக வும் அவர்கள் எந்த அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர் என்பதையும் விசாரணை செய்து வருவதாக விசாரணை அதிகாரி கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பொது மன்னிப்பு வழங்கப் பட்ட 37 பேர் விடுவிக்கப்படவில்லை என்ற தகவல்கள் கிடைத்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சிறைச்சாலைத் திணைக்களத்தின் விரிவான மறு சீரமைப்பு குறித்து நீதி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது டன் அனைத்து சிறைச்சாலை கண்காணிப்பாளர்களும் நாளை 23ஆம் திகதி கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மின்கட்டண அதிகரிப்பால் பொருட்களின் விலை உயர்வு

## நுகர்வோர் சங்கங்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவால், அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகளும் தன்னிச்சையாக உயர்த்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேவேளை, நாடு முழுவதும் அரிசி, தேங்காய், காய்கறிகள், மீன், இறைச்சி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சந்தையில் பெருமளவில் உயர்ந்துள்ளதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் சவர்க்காரம், சலவைத் தூள், பற்பசை மற்றும் ஷம்போ போன்ற பொருட்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்துள்ளன.

வணிகர்கள் மற்றும் உற்பத்தியா ளர்கள் தங்கள் நுகர்வுப் பொருட்களை தன்னிச்சையான விலையில் விற்பனை செய்வதால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விலைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று நுகர்வோர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

## அநுர அரசு ...

மக்கள் விடுதலை முன்னணி தற்போதைய அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்து, தற்போதுள்ள எரிபொருள் மாபியாவை மாற்றியமைத்து முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்திருந்தது.

இருந்த போதிலும் இன்று, அந்த முறைமையில் மாற்றம், வார்த்தைகளுக்குள் மட்டுண்டு, எரிபொருள் ஆற்றல் மாபியாவை ஊக்குவிக்கும் நிலைக்கு வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

கூரைகளின் மீது பொருத்தப்படும் சூரிய மின் தகடுகளுக்கான கட்டணம் ஒரு கிலோவாட் மணிக்கு ரூ.37 இல் இருந்து ரூ.20 ஆக 45% ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

இது சூரிய சக்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை அல்ல. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை நோக்கித் திரும்பும் பலரை அதனை விட்டும் விரட்டியடிக்கும் நடவடிக்கையாக அமைந்து காணப்படுகிறது.

அவ்வாறே இது எரிபொருள் ஆற்றல் மாபியாவை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாகவும் அமைந்து காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏராளமான சிறிய மட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சூரிய ஆற்றல் தொழில்முனைவோருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஆயிரம் தொழில் நடவடிக்கைகளில் பணிபுரியும் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை இந்த சூரிய சக்தி பேனல் கட்டணம் 45% குறைப்பு மோசமாகப் பாதித்துள்ளது. அவர்களின் தொழில்களும் கேள்விக்குறியாக மாறி விட்டன. முழுத்துறையும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## அரசியல் ...

தேட முயல்வதை நிறுத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கில் கண்டுபிடிக்கப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்துவது தமிழ்த் தரப்பினரின் வழமை. முதலில் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் உண்மையில் யாருடையவை என்பது பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட வேண்டும்.

ஏனெனில் வடக்கில் போர் மற்றும் அசாதாரண நிலைமைகளின்போது தமிழ் மக்களும் இறந்தார்கள. முஸ்லிம் மக்களும் இறந்தார்கள. சிங்கள மக்களும் இறந்தார்கள். விடுதலைப் புலிகளும் இறந்தார்கள். இராணுவத்தினரும் இறந்தார்கள். தற்போது மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுடையவை என்றால் அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பதை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். வடக்கில் போரில் மாத்திரம் தமிழ் மக்கள் இறக்கவில்லை. விடுதலைப் புலிகளின் சித்திரவதைகளின்போதும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். எனவே, எல்லாவற்றுக்கும் இராணுவத்தினரைச் சாட்டுவதைத் தமிழ்த் தரப்பினர் தவிர்க்க வேண்டும்.

யாழ்.செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முயல்கின்றனர் என்பதே உண்மை. இந்தச் செயலை அவர்கள் நிறுத்த வேண்டும். முதலில் அந்தப் புதைகுழியில் உள்ள மனித எலும்புக்கூடுகள் யாருடையவை என்பதும், அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பதும் பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட வேண்டும் என்றார். (ம-7)

## நாவாந்துறையில் ...

டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## யாழில் ...

நபர்கள் நேற்றையதினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது மூன்று கூரிய வாள்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

உதயபுரம் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு சகோதரர்கள் மீது இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரியாலை நாயான்மார்கட்டைச் சேர்ந்த 25, 28 மற்றும் 30 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## கிளிநொச்சியில் ...

மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,316)


**வேலையாட்கள் தேவை**

K.K.S றோட் கோண்டாவிலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு அனைத்து வேலைக்கும் ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக்கொள்ளப்படும்

**077 804 2561**

(4614)

**விற்பனையாளர் தேவை**

எமது 41, பெரிய கடை வீதியில் உள்ள பிடவைக் கடைக்கு அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

(4613)

**சிவகணேசன் TEX**

41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்

**மணிவிழா வாழ்த்துக்கள்**

செல்வி

**சுதாமதி கனகரத்தினம்**

(SLTS - I, B.Ed)

யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை



**சேவை விபரம்**

- யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் (03.01.2000 – 14.06.2001)
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (15.06.2001 – 31.06.2003)
- யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் (01.07.2003 – 08.01.2008)
- யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் (09.01.2008 – 31.12.2010)
- கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம் (01.01.2011 – 31.12.2012)
- யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை (01.01.2013 – 12.01.2021)
- யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் (13.01.2021 – 07.02.2021)
- யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை (08.02.2021 – 22.06.2025 (இன்று வரை))

Best Wishes

கற்றறிந்த வித்தையினை வித்தாரமாய் விதைத்து
கல்விப் பணியே கடவுட் பணியென
எண்ணிலா மாணவர்க்கு எளிதாய்ப் போதித்து
வாழ்வில் ஏற்றமுற அரவணைத்த ஆசானை
மணிவிழா நாளில் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்–
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

(C-3238)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா உயர்ஸ்...

யாழ்ப்பாணமும் பயணமாவார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அவர் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஒருவர் நாட்டுக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

இந்த விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு அமைச்சர், சுற்றுலா அமைச்சர் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் மற்றுமொரு பகுதியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் புனித தலதாமாளிகை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கும் பயணிக்கவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## 2 ஆயிரத்து...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

35 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப் பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி குறித்த அமைதி வழிப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட தனியார் காணிகள் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகிறது.

ஆனால் யுத்தம் நிறைவிற்கு வந்த பின்னராக ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் மக்கள் காணிகளை படிப்படியாக சிறிய சிறிய துண்டுகளாக விடுவித்தனர்.

இருப்பினும் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் சுயமாகத் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் 2400 ஏக்கர் காணிகளையும் முழுமையாக விடுவிப்பதே தமது வாழ்வியலை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் குறித்த போராட்டத்தை முன்னெடுப்பதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (ம-7,33)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1235)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 22/9, சாத்தனாவத்தை வீதி, வட்டாரம் -04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. சாத்தனாவத்தை வீதியிலுள்ள இல 22/9 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **K.சுப்பையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் ஒரு பகுதியினை **வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற P294 ஆம் இலக்க வழக்கின் மூலம் மகாதேவ பிள்ளையார் கோவிலின் நலனுக்காக நம்பிக்கைச்சொத்தாக வைத்திருக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த ஆதனத்தில் வருமானக்குறைவின் காரணமாக குறித்த ஆதனத்திற்கு பதிலாக வேறோர் ஆதனத்தினை நம்பிக்கைச் சொத்தாக வைத்திருப்பதாகவும் குறித்த ஆதனத்தினை நம்பிக்கைச்சொத்திலிருந்து விலக்குவதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் 11812/26.08.1978ஆம் இலக்கத்தில் நம்பிக்கைப் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் மற்றைய பகுதியினை **கந்தையா சிவப்பிரகாசம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5592/04.10.1978ம் இலக்க உறுதியால் **சரவணமுத்து இராசநாயகமும் பெண் அன்னலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த ஆதனமானது 1961ஆம் ஆண்டு மாசி மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற P294ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த இறுதித்தீர்வைப்படி "எங்களில் 2ஆம் பெயரின் பிரிவிடுதல் பங்கும் எங்களாட்சியும்" எனக் குறிப்பிட்டே குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கந்தையா சிவப்பிரகாசம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11957/20.12.1978 இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**முத்துதம்பி தயாபரன் பெண் ஜெகதீஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2601/18.12.1997ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தையா சிவப்பிரகாசம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**பரராஜசிங்கம் அருள்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1662/20.10.2007ஆம் இலக்க உறுதியால் குறித்த **முத்துதம்பி தயாபரனும் பெண் ஜெகதீஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த பரராஜசிங்கம் அருள் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4973/ 29.07.2013ஆம் இலக்க உறுதியால் **சண்முகம் பத்மநாதன் மகள் தேவிகா** ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை நிபந்தனை அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்

குறித்த **பரராஜசிங்கம் அருள்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜசர்மா லலிதாதாஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 826/25.10.2022ஆம் இலக்க உறுதியால் **பத்மநாதன் பரமேஸ்வரனும் பெண் தேவிகாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மாயவன் சுகனும், சுகன் பெண் கபினாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 814/ 06.12.2022 ஆம் இலக்க உறுதியால் **பரராஜசிங்கம் அருளும், அருள் பெண் ஜெயந்தினியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **மாயவன் சுகனும், சுகன் பெண் கபினாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மாயவன் சுகனும், சுகன் பெண் கபினாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(4605)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 22/9, சாத்தனாவத்தை வீதி, வட்டாரம் -04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. சாத்தனாவத்தை வீதியிலுள்ள இல 22/9 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **K.சுப்பையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் ஒரு பகுதியினை **வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற P294 ஆம் இலக்க வழக்கின் மூலம் மகாதேவ பிள்ளையார் கோவிலின் நலனுக்காக நம்பிக்கைச்சொத்தாக வைத்திருக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த ஆதனத்தில் வருமானக்குறைவின் காரணமாக குறித்த ஆதனத்திற்கு பதிலாக வேறோர் ஆதனத்தினை நம்பிக்கைச் சொத்தாக வைத்திருப்பதாகவும் குறித்த ஆதனத்தினை நம்பிக்கைச்சொத்திலிருந்து விலக்குவதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் 11812/26.08.1978ஆம் இலக்கத்தில் நம்பிக்கைப் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் மற்றைய பகுதியினை **கந்தையா சிவப்பிரகாசம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5592/04.10.1978ம் இலக்க உறுதியால் **சரவணமுத்து இராசநாயகமும் பெண் அன்னலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த ஆதனமானது 1961ஆம் ஆண்டு மாசி மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற P294ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த இறுதித்தீர்வைப்படி "எங்களில் 2ஆம் பெயரின் பிரிவிடுதல் பங்கும் எங்களாட்சியும்" எனக் குறிப்பிட்டே குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கந்தையா சிவப்பிரகாசம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11957/20.12.1978 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**முத்துதம்பி தயாபரன் பெண் ஜெகதீஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2601/18.12.1997ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தையா சிவப்பிரகாசம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**பரராஜசிங்கம் அருள்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1662/20.10.2007ஆம் இலக்க உறுதியால் குறித்த **முத்துதம்பி தயாபரனும் பெண் ஜெகதீஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த பரராஜசிங்கம் அருள் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4973/ 29.07.2013ஆம் இலக்க உறுதியால் **சண்முகம் பத்மநாதன் மகள் தேவிகா** ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை நிபந்தனை அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்

குறித்த **பரராஜசிங்கம் அருள்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜசர்மா லலிதாதாஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 826/25.10.2022ஆம் இலக்க உறுதியால் **பத்மநாதன் பரமேஸ்வரனும் பெண் தேவிகாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நிர்மலன் கைம்பெண் சந்திரலீலா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 815/ 06.12.2022 ஆம் இலக்க உறுதியால் **பரராஜசிங்கம் அருளும், அருள் பெண் ஜெயந்தினியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நிர்மலன் கைம்பெண் சந்திரலீலா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நிர்மலன் கைம்பெண் சந்திரலீலா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(4605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க தயார்-ஐ.நா தெரிவிப்பு

**(கொழும்பு)**

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குழுவின் அறிக்கை தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்திலிருந்து உதவி வழங்கத் தயாராக இருப்பதாக யுனிசெஃப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.**

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்ட்ரே பிரான்ஜ் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதிகள் இடையே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவுகள் தொடர்பான எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது. (நி)

## மைத்திரியின் ஆட்சியில் நிதி மோசடி குற்றப்புலனாய்வில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும், நிதி முறைகேடு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அவரது ஆட்சி காலத்தில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 27.5 மில்லியன் ரூபாய் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுதாரபுரம் எப்பாவல கூட்டுறவு சங்கத்தின் துணைத் தலைவர் பி.வி. லக்ஸ்மன் ஜெயவர்தன இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

2017ஆம் ஆண்டு, தமது சங்கத்திற்கு சொந்தமான நிலத்தில், மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி நிதியில் இந்த நிதி ஒதுக்கப்பட்டபோதும், இன்றுவரை அந்தத் திட்டம் முழுமை பெறவில்லை என்று அவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (நி)



யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் 2025 ஆம் ஆண்டுக்கான கல்விக் கண்காட்சி கல்லூரி அதிபர் திருமதி கி.குலசங்கர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (படம்-கஜீபன்)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த புதன் கிழமை தந்தையர் தின நிகழ்வு கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)



பொலி கண்டி பாரதி சன சமூக நிலையத்தின் வருடாந்த முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி அணையா விளக்கு போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

மனிதப் புதைகுழிக்கு சர்வ தேச நீதி கோரி "அணையா விளக்கு" போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பினால் நாளை 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் வெகுசனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அணையா விளக்குப் போராட்டம் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தின்போது தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கினை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற்பாட்டாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு வரையில் செம்மணி பகுதியில் பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டுள்ள போதிலும், அது குறித்த மர்மம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகிறது.

இனவழிப்பிற்கு ஆதாரமான இந்தக் குற்றச்செயல்களுக்கான காரணமோ, இதற்கு அதிகாரம் வழங்கிய தரப்புக்கள் யார் என்பதோ, மீளவும் இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்படாது என்பதற்கான பொறுப்புக் கூறலோ வெளிப்படுத்தப்படவில்லை.

எனவே இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திற்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும் என்கிற குறியீட்டு அர்த்தத்திலேயே இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக்கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது.

போராட்டம் இடம்பெறும் மூன்று தினங்களில், முதல் இரண்டு நாட்களிலும் சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதமும், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செய்திப் படக் கண்காட்சியும், மக்கள் கையெழுத்து திரட்டலும், செம்மணி மனிதப் புதைகுழியோடு தொடர்புபட்ட கதை, கவிதை படிப்பும், நாடக அளிக்கையும் இடம்பெறும்.

25 ஆம் திகதியாகிய மூன்றாம் நாள் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-33-104)

## காரைக்காலில் திண்மக்கழிவுகளை தரம்பிரிக்கத் தடை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையத்தின் செயற்பாட்டை உடன் நிறுத்தி, அங்குள்ள கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள குறித்த நிலையத்தால், அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மருத்துவ, இலத்திரனியல், இரசாயன, பொலித்தீன், பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுகளை தரம் பிரிக்காமல் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

அதேவேளை தாம் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல் துர்நாற்றத்தையே சுவாசித்து வருவதாகவும் நிலத்தடி நீரை சுத்தமாக குடிக்க முடியாமலும் நிம்மதியாக உறங்க முடியாமலும் அவதிப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாக தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அண்மைக் காலமாக இனம் தெரியாத நபர்கள் குறித்த கழிவுகளுக்கு இரவு வேளைகளில் தீ வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால் ஏற்படும் தீயினை கட்டுப்படுத்த பிரதேச சபையினர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், தீயினால் ஏற்படும் புகையினால் அயல் மக்கள் பெரும் துன்பங்களையும் எதிர்கொண்டு வந்தனர்.

அவ்வாறான நிலையில் இதனை ஒரு பொதுத் தொல்லையாகவும் சூழல் மாசடையக் கூடிய வகையில் காணப்படுகின்றமை தொடர்பிலும் யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், குறித்த வழக்கின் மீதான விசாரணைகளை அடுத்து, அப்பகுதியில் கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும், அங்குள்ள கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை காரைக்காலில் உள்ள கழிவு தரம் பிரிக்கும் மையத்தை அப்பகுதியில் இருந்து அகற்றி, பிறிதொரு இடத்திற்கு அதனை மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இனிவரும் காலங்களில் கழிவுகளை பொதுமக்கள் தரம் பிரித்தே கையளிக்க வேண்டும் எனவும், தரம் பிரிக்காத கழிவுகளை பிரதேச சபை சுகாதார தொழிலாளிகள் கையேற்க மாட்டார்கள் எனவும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)



யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் நேற்று காலை 7:30 முதல் 8:30 மணி வரை யோகாதின நிகழ்வு நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 240 | 300 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 700 | 650 | 800 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 220 | 250 |
| கோவா | 500 | 450 | 400 | 400 | 600 |
| கரட் | 700 | 650 | 600 | 650 | 800 |
| பூசணி | 120 | 160 | 160 | 150 | 200 |
| புடோல் | 120 | 150 | 200 | 130 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 700 | 600 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 450 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 280 | 300 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 450 | 400 | 380 | 400 |
| கறிமிளகாய் | 800 | 600 | 700 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1500 | 1300 | 1500 |
| போஞ்சி | 700 | 800 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 160 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 20-80 | 150 | 100 | 80 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 150 | 100-170 | 150-180 |
| இராசவள்ளி | 650 | 600 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | 600 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | -- | 200 |

## ஆங்கில கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற எஸ்.ரி.இ.பி.எஸ் நிறுவனத்தினால் கடந்த 2024ஆம்ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கில கற்கைநெறி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஆர்வமுள்ள மாணவர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் வீதியில் அமைந்துள்ள எஸ்.ரி.இ.பி.எஸ் நிறுவனத்தில் நேரிலோ அல்லது 021 222 45 80 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது stepsmoe@gmail.com என்ற முகவரி மூலமாகவோ பதிவுகளை மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## மரண அறிவித்தல்



மலர்வு 24 . 11 . 1949

உதிர்வு 20 . 06 . 2025

### அமரர். கந்தையா சிதம்பரநாதன்

யாழ்ப்பாணம், வடமராட்சி வதிரி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வடலிப்பாதி தும்பளை பருத்தித்துறையை புகுந்த இடமாகவும் தம்பியோடை, வதிரி, கரவெட்டியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அமரர்.கந்தையா சிதம்பரநாதன் அவர்கள் 20.06.2025 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாவதி (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்-மந்திகை) அவர்களின் அன்புக் கணவரும், குலராஜேந்திரம் (கனடா), சிவரட்ணம், பஞ்சபூரணம், தர்மராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அச்சுதன் (மென்பொருள் பொறியியலாளர்-சிங்கப்பூர்), அபிராமி (BA) அவர்களின் பாசமிகு தந்தையாரும், அபர்ணா (வைத்தியர் புற்றுநோய் வைத்தியசாலை-மகரகம) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தம்பியோடை, வதிரி, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

077 057 0363 (C-3240)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்கு நாதம்
நாதம் 498
22.06.2025
பக்கம் 07

# அன்றே கொல்லும் தெய்வம்

அபிமன்யு

நாட்டின் அரசன் ஒருவனுக்கு தொடர்ந்து ஒரே பழங்கள் உண்டு அலுத்துவிடவே, தான் உண்ணாத புதிய பழங்களை உண்பதற்கு ஆசை வந்தது.

உடனே நாட்டு மக்களுக்கு ஓர் அறிவித்தலை விடுகிறான். அதாவது நான் இதுவரை உண்ணாத, நான் அறிந்திராத பழத்தை எனக்குத் தருபவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு என்பதே அவனின் அறிவிப்பு.

இதில் ஒரு விடயமும் உண்டு. அதாவது பொதுமக்கள் கொண்டு வரும் பழம் நான் உண்ட பழமாக இருந்தால் அந்தப் பழத்தை கொண்டுவருபவரின் வாய்க்குள் திணிக்கப்படும் என்பது விசேட அறிவித்தலாக இருந்தது.

நாடு முழுவதும் அறிவித்தல் விடுக்கப்பட்டது. மறுநாள் அரண்மனை வாயிலில் பெரிய சனக் கூட்டம். எப்படியாவது ஆயிரம் பொற்காசுகளை வென்றுவிட வேண்டும் என நாட்டுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் வரிசையில் நின்றனர்.

ஒருவன் அன்னாசிப் பழத்துடன் சென்றிருந்தான். அதைக் கண்டதும் அரசனுக்கு கெட்ட கோபம். இதுவா நான் உண்ணாத பழம் என்று கேட்டபடி காவலருக்கு சைகை காட்டினான்.

காவலர்கள் அன்னாசி பழத்தை வாங்கி அவன் வாயில் திணித்தனர். வாயினால் இரத்தம் வழிந்தோடிய போதும் அவன் சிரிக்கத் தொடங்கினான்.

அரசனுக்கு மீண்டும் கோபம் வரவே வாயில் இரத்தம் வழிந் தோடுகிறது சிரிக்கிறாயே ஏன் என்று கேட்டான்.

அதற்கு அவன் சொன்னான். மன்னா நான் பரவாயில்லை, அன்னாசிப் பழத்துடன் வந்தேன். வரிசையில் இருவர் பலாப்பழத்துடன் நிற்கிறார்கள். அவர்களை நினைத்தேன். சிரித்தேன் என்றபடி வெளியே சென்றான்.

இந்த கதை இப்போது இவ்விடத்தில் ஏன் என்று நீங்கள் மனதில் முணு முணுப்பது புரிகிறது.

இந்தக் கதைக்கும் இலங்கையின் தற்போதைய அரசியல்வாதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.



அதாவது முன்னாள் அமைச்சர்களான மேர்வின் சில்வா, ஹெகலிய ரம்புக்வெல ஆகியோரின் கைதுகளைக் கேள்விப்படும் போது அன்னாசிப் பழங்களை வைத்திருந்தவர்களுக்கே இந் நிலை எனின், இன்னும் பலர் பலாப்பழத்துடன் நிற்கிறார்களே அவர்களின் நிலை எவ்வாறு இருக்கப் போகிறதோ என நினைக்க சிரிப்பே மேலோங்கியது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்டிருப்பவர்களில் ஒருவர் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, இவரை மகிந்த ராஜபக்சவின் செல்லப் பிள்ளை என்றே கூறலாம். அந்தளவிற்கு மகிந்த ஆட்சிக் காலத்தில் அவரின் அட்டகாசங்கள் இருந்தன.

2018 ஆம் ஆண்டு டெங்கு ஒழிப்பு தொடர்பில் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு அறிவித்தல் விட்டிருந்தார், அப்போதைய அமைச்சர் மேர்வின் சில்வா.

குறித்த சந்திப்பில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் சமூகமளிக்கவில்லை என்பதை அறிந்து, அவரை அவசர அவசரமாக அழைத்து அங்குள்ள மரமொன்றில் கட்டி வைத்ததுடன் நான் கூப்பிட்டால் நீ வர வேண்டும். வராமல் விடும் எவருக்கும் இதுவே நிலை என்று எகத்தாளமாக பேசினார்.

குறித்த செயலுக்கு பெண் அதிகாரி ஒருவர் எதிர்ப்புத் தெரிவிக்க உன்னையும் கட்டி வைப்பேன் என்று அதட்டினார்.

இவை, தன் கையில் அதிகாரம் இருக்கிறது. தான் எதையும் செய்யலாம். என்னைக் கேள்வி கேட்க எவராலும் முடியாது என்ற மமதையே. ஆயினும் கால ஓட்டம், அவருக்குப் பதவி பறிபோனது, பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாது போனது.

70 மில்லியன் சொத்துக்களை தகுந்த ஆதாரங்களின்றி கொள்வனவு செய்தது, 30 மில்லியன் சொத்துக்களை கையகப்படுத்தியது, தனது மகனுக்கு பல கோடி பெறுமதியான அதி சொகுசு ஜீப் ஒன்றை கொள்வனவு செய்தது போன்ற காரணங்களுக்காக அவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கையில் ஒரு தண்ணீர் போத்தலுடன் தளர்ந்த நடையில் சென்ற வீடியோக்களைப் பார்க்கும் போது வாழ்க்கை ஒரு வட்டம். இங்கு ஜெயிப்பவன் தோற்பான். தோற்பவன் ஜெயிப்பான் என்ற சினிமா வசனமே நினைவுக்கு வந்தது.

குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர் பட்டியலில் அடுத்து முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

மருந்து இறக்குமதியில் பாரிய ஊழல் மோசடி செய்தமை உறுதி செய்ததையடுத்து ஹெகலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுள்ளார்.



கொடுமை, இவரது மனைவி, மகள் போன்றோரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுக்கப்பட்டது தான்.

ஒரு மனிதன் தன் உடலை கீறிக் கிழிக்க அனுமதி கொடுப்பது மருத்துவருக்கு மட்டுமே. தவிர, அவர் தரும் மருந்துகளை எந்தவித கேள்வியுமின்றி எடுத்துக் கொள்வான். ஏனென்றால் மருத்துவம் என்பது மகத்துவமானது.

அப்படிப்பட்ட மகத்துவமான மருத்துவத்திற்குத் தேவையான மருந்துகளில் ஊழல் செய்வது மனித குலத்திற்குச் செய்யும் மிகப்பெரிய துரோகம் என்றே கூறி விடலாம்.

முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவினால் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் மனிதனுக்கு தீங்கை விளைவிக்கும் பக்ரீறியா அடங்கியிருப்பதும், புற்றுநோய்க்கு பயன்படுத்தும் மருந்தில் வெறும் உப்பு நீர் மட்டுமே இருந்ததான ஆய்வு முடிவுகளைக் கேட்கும் போது மக்கள் உயிருடன் விளையாடி சொத்துச் சேர்த்து என்னத்தைக் கண்டுவிடப் போகின்றோம் என மனம் கொதித்தது.

ஹெகலிய ரம்புக்வெல சிறைக்குச் செல்லும் போது கைத்தடியுடன் கூடையில் தனது உடைமைகளையும் எடுத்துக் கொண்டு சென்ற காட்சி, மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்வாவினால் அர்சுணனுக்கு உபதேசித்த கீதா உபதேசத்திலும் மேலான உபதேசமாக இருந்தது.

என்ன செய்வது, காலம் என்பது மிக வேகமானது. அது நமக்கான காட்சிகளை நொடிக்கு நொடி வடித்துக் கொண்டே இருக்கும்.

இதைப் புரியாமல் ஏதோ நாம் ஆயிரம் வருடங்கள் வாழப் போகிறோம் என்ற நினைப்பில் தேவைக்கு அதிக சொத்துச் சேர்த்து அதை எந்த நேரத்தில் எவர் கவர்ந்து செல்வார்கள் என்ற பயத்துடனேயே காலத்தைக் கழித்து விடுகின்றோம்.

இவை அனைத்துக்கும் மேல் அடுத்தவரை ஏய்த்துப் பிழைப்பது ஒரு நாளும் நிலைக்காது. அது அவரின் சந்ததிக்கே சாபக்கேடாக அமைந்து விடும்.

உப்புத் தின்றவன் தண்ணீர் குடித்தாக வேண்டும் என்பதைப் போல அந்த சாபக்கேட்டை அவர்களின் பரம்பரை அனுபவித்தே ஆகும்.


அரசன் அன்று கொள்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது மாறிவிட்டது. இப்போது அரசன் நின்று கொல்வான் தெய்வம் அன்றே கொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



பண்ணைக்குச் செல்லும் வீதியிலுள்ள குன்றும் குழியும்



வீ.பரந்தாமன்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். பண்டிதர் வீ.பரந்தாமன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

தமிழ் மீது அளவு கடந்த பற்றுக் கொண்ட பண்டிதர் வீ. பரந்தாமன் மிகச் சிறந்த விமர்சகர். இனப்பற்றுதலோடு பாடல்களை இயற்றியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். கையில் வைத்திருந்த ஒரு படத்தை எடுத்து காட்டினார்.

யாழ்ப்பாணப் பிரதம தபாலகத்திற்கு அருகாமையில், தீவகத்திற்குச் செல்கின்ற பண்ணை வீதிக்குத் திரும்புகின்ற வீதி குன்றும் குழியுமாக உடைந்து கிடக்கிறது.

இருந்தும் அந்த வீதியைத் திருத்துவதற்கு இன்னும் ஒருத்தரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஒரு வீதியில் சிறு திருத்தத்தைக் கூடச் செய்வதற்கு முடியவில்லை என்றால், எப்படி எங்கட நிலைமை இருக்குதெண்டு பாருங்கஎன்.

இவ்வாறு விதானையார் கூறியதும் அவசரப்பட்ட சாத்திரியார் கடவுளே! அந்த வீதி பற்றி நாங்களும் எத்தனை தடவை ஆலடியில் கதைத்துப் போட்டம்.

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

குறித்த வீதி குன்றும் குழியுமாக இருப்பதால், வாகனங்கள் விழுந்து எழும்பிப் போகின்றன.

பல சந்தர்ப்பங்களில் பெண்கள் மோட்டார் சைக்கிளில் ஓடி வந்து அந்தக் கிடங்கில விழுந்து காயப்படுகினம். தவிர, அவர்களின்ர மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்து போகின்றன.


**கங்காணி:-** சொன்னால் போல நயினாதீவு நாகபூசணி அம்மனும் கொடியேறப் போறா அம்மனின் திருவிழாத் தொடங்கிவிட்டால், அந்த வீதியால இலட்சக்கணக்கான மக்கள் பயணிப்பர். என்ன நடக்கப் போகுதோ தெரியல்லை.

**சிறாப்பர்:-** நயினாதீவுத் திருவிழாவுக்கு முன்னராவது வீதியிலுள்ள குன்று குழிகளை நிரப்ப வேணும்.

**பண்டிதர்:-** எங்கட வட மாகாணத்தில எந்தப் பிரச்சினையும் தீர்ந்தபாடில்லை.

**மூப்பர்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** இந்தாப்பாருங்க, கட்டுமானப் பணிகளுக்கு மண் எடுக்க முடியாமல் இருக்குது, அதிலும் மண்ணின்ர விலையைக் கேட்டால் ஈரல் கருகிப் போகும். அந்த அளவிற்கு மண்ணின்ர விலை மலை போல ஏறியிருக்குது.



## காணி இல்லாத மக்களுக்கு அரச காணிகளை வழுங்குங்கள்

அதேநேரம் தரமற்ற மண்ணில கட்டுமானத்தை மேற்கொள்வதால கட்டப்படுகின்ற கட்டடங்களின்ர தரம் கேள்விக்குறியாகுது.

ஆகையால கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு சரியான ஒழுங்கைப் பின்பற்ற வேணும்.

**சிறாப்பர்:-** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

மண் விநியோகத்தில ஒரு சீர் ஒழுங்கு இல்லாததால, எல்லாம் அம்போ என்றாகிப் போகுது.

அதிலும் ஏழைக் குடும்பங்கள் வீடு கட்டுவதெண்டால் மண் விற்கிற விலைக்கு அவையள் என்ன செய்ய முடியும்.

**வாத்தியார்:-** கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மண்ணை வழங்குவது தொடர்பில் ஒரு நிரந்தரமான தீர்மானத்தை வடக்கு மாகாண நிர்வாகம் எடுக்க வேணும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம் என்று கூற, குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேறியது.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவ பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** யாழ். மாவட்டத்தின்ர பதில் அரச அதிபராக இருந்த மருதலிங்கம் பிரதீபன் யாழ்.மாவட்ட அரச அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார்.

அவருக்கு ஆலடி மாநாட்டின் சார்பில வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாத்தியார்:-** மிகக் குறைந்த வயதில யாழ். மாவட்ட அரச அதிபராக நியமனம் பெற்ற பெருமை பிரதீபனுக்குரியது.

அதோட பதில் அரச அதிபராக இருந்து மூன்று தேர்தல்களை மிக ஒழுங்காக நடத்திய பெருமை அவரைச் சாரும்.

**விதானையார்:-** உண்மை தான், ஜனாதிபதித் தேர்தல். பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றை எந்த வித குறையும் சொல்ல முடியாத அளவில மிகவும் ஒழுங்கு சீராக நடத்திய பெருமை யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதீபனையே சாரும்.

அவருக்கு இந்த இடத்தில வாழ்த்து கூறுவதோட, ஒரு முக்கியமான கோரிக்கையும் அவரிட்ட முன்வைக்க வேணும்.

**சாத்திரியார்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** எங்கட யாழ். மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை காணிகள் இல்லாத ஏழை மக்களுக்கு வழங்கிற ஒரு திட்டத்தை யாழ்ப்பாண அரச அதிபர் மேற்கொள்ள வேணும்.

கடந்த காலங்களில காணி இல்லாத காரணத்தால, அரச வீட்டுத் திட்டம் கிடைக்காத எத்தனையோ குடும்பங்கள் எங்கள் மத்தியில இருக்கினம்.


ஆகையால காணி இல்லாத குடும்பங்களுக்கு அரச காணிகளை வழங்கினால், அந்தக் குடும்பங்களும் சொந்த வீட்டில கௌரவமாக வாழக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இதை அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஒரு பெரும் திட்டமாக முன்னெடுக்க வேணும் எண்டு கேட்டுக் கொள்கிறம்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏர் இந்தியா விமான விபத்துக்கான காரணம் என்ன வியாசரே?



பண்டிதர் வீ.பரந்தாமன் ஐயா பற்றிக் கூறுங்களேன் வியாசரே?

**தமிழரசின் வரலாறு அறிய வேண்டும் என்றால் யாரைக் கேட்க வேண்டும் என்று கேட்டான் ஒருவன். அக்கட்சியின் மூத்த அரசியல்வாதிகளைக் கேட்கச் சொன்னேன். அவனோ பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்கிறானே?**

*சிவயோகன்-புளியங்குளம்*

சிறையில் இருக்கும் வடிவேலு தனது உத வியாள் இருவரை தனக்கு ஜாமின் எடுக்க அனுப்பி வைத்து விட்டு காத்திருப்பார்.

அவர்கள் வந்து, பாஸ் ஊரில் உள்ள எத்தினையோ மார்க்கட் எல்லாம் போய் விசாரித்தோம் ஜாமின் இல்லை என்கிறார்கள். இதில் விசேடம் என்னென்றால் கடலிலும் இல்லையாம் என்பான் ஒருவன்.

உங்களின் கேள்வியை வாசிக்கும் போது 'கடலிலும் இல்லையாம்' என்பதே நினைவுக்கு வந்தது.

**இப்போது காசா மக்கள் துன்பப்படுவதைப் போல அப்போது ஈழத் தமிழினம் துன்பப்பட்டதல்லவா வியாசரே?**

*பிரியன்-கிளிநொச்சி*

உண்மை. ஆயினும் காசாவுக்கும் ஈழத்திற்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதாவது காசாவை அயல் நாட்டின் யூத இனமான இஸ்ரேல் குண்டு வீசித் தாக்கி அழிக்கிறது.

ஆனால் ஈழத்தில் அவ்வாறில்லையே. எங்கள் சொந்த நாட்டுப் படைகளே எங்கள் இனத்தை கொன்றொழித்தனர் என்ற கொடுமைத்தனத்தை வேறு எங்கு கண்டுவிட முடியும்.

பேரினவாத சக்திகளுக்குள் சிற்றினம் சிக்குண்டு போவது தான் உலக வழமை போலாகி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஈரான் அணுகுண்டு தயாரிக்கக் கூடாது என்று அணுகுண்டுகளை வைத்திருக்கும் நாடுகள் சொல்வது தான் வேடிக்கையானது.

**மறைந்த பண்டிதர் வீ.பரந்தாமன் ஐயா பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

*தீபன்-பருத்தித்துறை*

பண்டிதர் பரந்தாமன் ஐயாவின் தமிழ்ப் புலமை ஒப்பற்றது. அவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

ஈழ விடுதலைப் போரிற்கு ஒப்பற்ற பங்காற்றியவர் ஐயா பண்டிதர் பரந்தாமன்.

மானம் ஒன்றே வாழ்வெனக்கூறி வழியில் நடந்தான் மாவீரன் என்ற தேச விடுதலைப் பாடலை இயற்றியவரும் ஐயா அவர்களே.

ஐயா தனது மகனையும் ஈழ மண் மீட்புக்காக அர்ப்பணித்தவர் என்பது இன்னும் பெருமைக்குரியது.

**தக் லைஃப் திரைப்படம் எப்படி இருக்கிறது வியாசரே?**

*பிரவீன்ஸ்-பருத்தித்துறை*

அனுபவம் வாய்ந்த இயக்குநர்கள் (சங்கர், மணிரத்தினம், ரவிக்குமார், சேரன்) தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றவேணுமெண்டால் சினிமாவை விட்டு விலகியிருப்பதே மிக்க நன்று.

ஏனென்றால் ஒரு காலத்தில் இவர்கள் கொடுத்த வெற்றிகள் மிக மிக உச்சமானவை. இப்போது அது முடியவில்லை என்றால் இருக்கும் மரியாதையுடன் ஒதுங்கி விடுவது தானே சிறந்தது. இல்லையெனில் தக் லைஃப் போன்ற அரைத்த மாக்களை மீண்டும் மீண்டும் அரைக்கும் நிலை வரும்.

அதன் விளைவு இருக்கும் மரியாதையும் இழக்கும் நிலை ஏற்பட்டு விடும்.

அன்பு
வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய
கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**போர் இடம்பெறாத செம்மணியிலேயே இத்தனை மனிதப் புதைகுழியுமென்றால், போர் நடந்த முள்ளிவாய்க்காலில்...?**

*சுதன்-குப்பிழான்*

செம்மணி புதைகுழி தமிழின அழிப்பின் அதி உச்ச சாட்சியம். நிச்சயம் அதற்கான நீதியை இந்த அரசு பெற்றுத்தர வேண்டும்.

அப்படிப் பெற்றுத் தந்தாலே அரசை ஆதரித்த தமிழ் மக்களுக்கு மனநிம்மதி கிடைக்கும்.

இல்லையேல் கடவுளே, இந்த அரசை நம்பி வாக்களித்தோம். இவர்களும் எம்மை ஏமாற்றி விட்டார்கள் என்று கதறி அழுவார்கள்.

செம்மணியில் தொடங்கி முள்ளிவாய்க்காலில் முடிக்கப்படுகிறது தமிழின அழிப்பு.

**உலக நாடுகளில் யுத்தம் பரவக் காரணம் என்ன வியாசரே?**

*பிரணாவ்-பருத்தித்துறை*

என்னை விட அவன் முன்னேறி விடக்கூடாது என்று சிறுமைத்தனம் நாட்டின் தலைவர்களிடம் இருந்தால் யுத்தம் மலிந்த நாடாகத்தானே இந்த உலகம் இருக்கும்.

தவிர, வல்லரசுகள் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு ஒரு களம் தேவை.

அதற்காக உலகின் எங்கோ ஒரு மூலையில் போர் என்ற தீ அணைந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

உயிர்களை அழிக்க பரிசோதனை செய்யும் இந்த கொடூரத்தனங்களுக்கு நிச்சயம் தண்டனை அனுபவித்தே தீருவார்கள்.

அந்தத் தண்டனை கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனையாகவே இருக்கும்.

**ஏர் இந்தியா விமான விபத்துக்கான காரணம் என்ன வியாசரே?**

*சமிக்ஷன்-நவாலி*

ஏர் இந்தியா விமானத்தில் இருந்த ஒருவரைத் தவிர மிகுதி அனைவரும் இன்று உயிருடன் இல்லை.

விமானம் சமநிலை குழம்பியதை உணர்வதற்குள் அது கட்டடத்தில் மோதி வெடித்தது என்றும் நான் எழுந்து பார்த்த போது விமானத்திற்குள் அனைவரும் பிணமாகக் கிடந்தனர் என்றும் விமானத்தின் அவசர வெளியேறல் கதவைத் திறந்து வெளியேறியதாகவும் கூறியிருக்கிறார்.

இந்த ஒரு விடயமே தற்போதைய சாட்சியம். விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளது.

அந்த ஆய்வில் தான் விபத்துக்கான முக்கிய காரணம் வெளிவரும். அதுவரை சிவனை வேண்டுவதை விட வேறு எதையும் செய்து விட முடியாது.

**உலகில் கலி முத்திவிட்டது போலத் தோன்றுகிறதே வியாசரே?**

*மகாலட்சுமி-கொக்குவில்*

தகப்பனை முதியோர் இல்லத்தில் சேர்க்க கூட்டிக் கொண்டு வந்த மகன், தகப்பன் தங்கும் அறை வசதிகள் பற்றியும், அங்கு அவருக்கு கொடுக்கப்படும் உணவுகள் பற்றியும் கவனமாகக் கேட்டறிந்து முடிவு செய்து விட்டு தகப்பனின் உடமைகளைத் தனது காரில் இருந்து எடுக்கச் செல்கிறான்.

அவற்றை எடுத்து வரும் போது அந்த இல்லத்தின் மேலாளருடன் தந்தை பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு விட்டு, அவரிடம் தந்தையைத் தெரியுமா என வினவுகிறார். அதற்கு அந்த மேலாளர் கூறுகிறார்,

"உங்கள் அப்பா முப்பது வருடங்களுக்கு முன்னர் ஒரு அனாதைப் பையனை இந்த இல்லத்தில் இருந்து எடுத்துச் சென்றார்" என்று.

மகன் குற்ற உணர்வில் கூனிக் குறுகி நிற்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதல் பெருவெளி...




“இருவிழியோ ஏவுகனை
வருவாயா எந்தன்துணை”
தாய் மடி நீயும்
எனைத்தாங்கும் தோளும் ஆகிறாய்
தாவாரம் தண்ணியாய் தவழ்ந்து
எனைத்தூவானமாய் நனைக்கிறாய்

எல்லை இல்லா வான் வெளியில்
கள்ளம் இல்லா மின் ஒளியில்
மங்கை எனும் உன் விழியில்
காதல் எனும் பெரு வலியில்
விழுந்தது நானோ?

**வ.மதிசுதன்,**
**புற்றளை புலோலி கிழக்கு,**
**பருத்தித்துறை.**

# கவிதைக் கலசம்


## அன்பு வாசகர்களே!

**உங்கள் அபிமான**
**சங்குநாதத்தில் நீங்களும்**
**எழுதலாம்...**

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**E-mail : valampurii@yahoo.com**
**Whatsapp : 076 097 3126**



# மாறாதோ பெயர் மாற்றங்கள்?



எம் மொழி உலகின்
செம்மொழி யென
தொன்மை மொழியாகிட
பன்னாட்டவர் மகிழ
இந்நாட்டில்
எம்பெயர்கள்
காலமாற்றங்களால்
மாறியதோ
இனிய தமிழால்
இல்லை நம் பெயர்கள்
நவீன மயமாகிவிட
நாமழைக்கு முடிவதில்லை
நா சுளுக்குகின்றது
தமிழ்த்தாய் மகிழ
தமிழ் பெயர் சூடுவோம்
பிறமொழிக் கலவாது
கலாச்சார மீதடும்
ஆடைகள் தவீனமாய்
போகட்டும்
பெயர்கள் தமிழில்
இனிக்கட்டும்.

**கலாபூஷணம்**
**தமிழினியன் பரந்தாமன் - வவுனியா.**

# கண்ணீர் சுவடுகள்



மீள முடியா காயங்கள்,
நெஞ்சில் நிழலாய் நின்றதே!
முள்ளிவாய்க்கால் மண்வாடை,
இரத்த களரியானதே!
கொத்துக் கொத்துக்காக வீழ்ந்தோமே,
கனவுகள் சிதைந்தனவே!
கண்ணீரின் சுவடுகள், காலம் மறக்காத
சாட்சியானதே!

ஈழ மறவர்களின் தியாகம், தமிழினம்
மறவாதே!
உலகம் அறியச் செய்தோம்,
உரிமை கோரிய போராட்டம்
மண்ணோடு மண்ணாகச் சாய்ந்தும்,
மனம் எழுந்து நிற்கிறதே
வீரத்தமிழரின் நினைவு,
விடுதலைக்கான விதைதான்

இத்தனையும் வெறும் நினைவு அல்ல,
எம்மவரின் அடையாளமே!
எழுந்து நிற்கும் ஒவ்வொரு தமிழனும்,
ஏந்தி வைக்கும் பொறுப்பாகும்
கண்ணீரின் சுவடுகள் நம் சொற்கள்
அல்ல - அவை எமது சுதந்திரம் வரை
எழுதும் உயிரின் வரிகள்!

**சிறிதரன் - அபிலாஷன்,**
**பிரித்தானியா.**

# கைக்கூ கவிதைகள்



பூக்களின் தேனீக்கள்
ஒட்டிக் கொண்டு நிற்கின்றன
பனித்துளிகள்

மல்லிகைப் பந்தல்
மேலே படர்ந்து இருக்கின்றன
பனித்துளிகள்

குடைகளின் வண்ணம்
மாறாமல் இருக்கின்றன
நிழற்படங்கள்

பள்ளிப் பருவம்
நினைவில் வருகிறது
வறுமைக் கோலம்.

உதிர்ந்த சிறகு
அடைபட்டு இருக்கிறது
புத்தகத்துக்குள்.

பால்ய நண்பர் சந்தித்ததும்
நினைவில் வருகின்றன
பள்ளி நினைவுகள்.

**பைந்தமிழ்ச் செம்மல் - நிர்மலா சிவராசசிங்கம்**

# ஒரு வழிப் பாதை



ஒரு வழிப்
பாதையென
ஒன்றிய அரசு கூறியது
இப்பாதை எப்பாதை
எனின்
அப்பாதை,
நகைகளின்
வீதியாம் இங்கு
கடைமையை
கையாளும்
காவலர் முதல்
கடைசிப்
படைவரை
கண்டபடி ஓட்டமாம்
இதில்
தூண்டிலில் சிக்கியே
துடித்ததோ
சிறியவை
கழட்டி
விடப்பட்டதோ
கண்ணியமாய்
பெரியவை

**சாந்தை விநாயகர்**
**மூ.ரமேஷ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் – இஸ்ரேல் போர்

# உலகப் போருக்கு

# வித்திடும் தொடக்கப்புள்ளி!




**இஸ்ரேலை வரைபடத்தில் இருந்து அழிப்போம், ஈரானின் அணுசக்தியை முற்றிலுமாக அழிப்போம் – ஒரு காலத்தில் நட்பு நாடுகளாக இருந்த இரு நாடுகளின் தற்போதைய நிலை இவ்வாறு இருப்பது நம்பமுடியாத மாற்றம்.**

1979ஆம் ஆண்டு ஈரானில் நடந்த இஸ்லாமியப் புரட்சி வரை, ஈரானும் இஸ்ரேலும் நட்பு நாடுகளாக இருந்தன. 1948இல் இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து புதிய நாடாக உருவானபோது, அரபு நாடுகளை எதிர்க்கும் பொருட்டு "எதிரிக்கு எதிரி நண்பன்" என்ற கோட்பாட்டில் ஈரான் நட்பு நாடாக இருந்தது. சொல்லப்போனால் இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக ஈரான் அதிக யூத மக்கள் தொகையைக் கொண்டிருந்தது.

இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாட்டும், ஈரானின் உளவு நிறுவனமும் தகவல்களைப் பகிர்ந்து கொண்டன. அக்காலத்தில் ஈரான் நாடே இஸ்ரேலுக்கு முக்கிய எண்ணெய் விநியோகஸ்தராக இருந்தது. ஈரானின் இராணுவத்தையும் தொழில்நுட்பத்தையும் நவீனமயமாக்க இஸ்ரேல் உதவியது. ஆனால், 1979இற்குப் பிறகு அயதுல்லா அலி கமேனியின் இஸ்லாமியக் குடியரசு உருவானபோது, இஸ்ரேலை சட்டவிரோத சியோனிச நாடாக ஈரான் அறிவித்தது. இப்படி பகிரங்கப் பகைமை உருவானாலும், 1980களில் இஸ்ரேல், ஈராக் ஜனாதிபதி சதாம் உசேனையே பெரிய அச்சுறுத்தலாகக் கருதியது. எனவே, ஈரான் – ஈராக் போரில் ஈரானுக்கு ஆயுதங்கள் வழங்கியது. இருப்பினும், 1990களுக்குப் பிறகு ஈரானின் அணுஆயுத நடவடிக்கைகள் இரு நாடுகளிடையே மிஞ்சியிருந்த மிச்சசொச்ச நட்பையும் முறித்தன.

இந்தப் பகையின் விளைவாக பாலஸ்தீன விடுதலையை ஆதரிக்கும் இஸ்லாமிய ஆயுத அமைப்புகளான ஹிஸ்புல்லா, ஹமாஸ் ஆகியவற்றுக்கு ஈரான் ஆதரவளிக்கத் தொடங்கியது. இதனால், ஈரானை தனது இருப்புக்கு அச்சுறுத்தலாக இஸ்ரேல் பார்க்கத் தொடங்கியது. 1990இல், ஈரான் தனது அணுத் திறன்களை முழுவீச்சில் உருவாக்கத் தொடங்கியது. உலக வல்லரசுகளும், குறிப்பாக இஸ்ரேலும், ஈரானின் அணு உருவாக்கத் திட்டத்தை விரும்பவில்லை.

2010இல் ஐ.நா. கண்காணிப்பு அமைப்பு, ஈரான் **19.8%** யுரேனியம் செறிவாக்கத் திறனை அடைந்ததாகக் கண்டறிந்தது. 2012இல் ஈரானின் யுரேனியத்தின் தூய்மை மேலும் உயர்ந்தது. இதையடுத்து, ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் 2015இல் அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தில் ஈரானைக் கையெழுத்திட வைத்தன. அதன்பிறகு, ஈரான் தனது சென்ட்ரிஃப்யூஜ் இயந்திரங்களை அகற்றி, செறிவூட்டலை **3.67%** ஆகக் குறைத்து அமைதியான பயன்பாட்டுக்கு மட்டுப்படுத்தியது.

இதற்கு பதிலாக, தன்மேல் விதிக்கப்பட்ட சர்வதேசத் தடைகள் நீக்கக் கோரியது. ஆனால், சமீபத்திய அறிக்கைகளை வைத்து, ஈரான் **60%** செறிவூட்டலை அடைந்ததாக இஸ்ரேல் குற்றம் சாட்டுகிறது. **60%** என்பது அணு ஆயுத நடவடிக்கைக்கு ஒரு முக்கியமான மைல்கல். ஏனெனில் அங்கிருந்து **90%** செறிவூட்டலை அடைந்து, ஈரானை அசைக்க முடியாத அணுசக்திநாடாக உருவாகுவது கடினமல்ல. இதை ஈரான் சில மாதங்களில் அடையலாம் என்று கருதியதே இப்போது நடந்துவரும் போருக்குக் காரணமாக இஸ்ரேல் கூறுவது.

இந்த ஜூன் 12ஆம் திகதி வெளியான **IAEA** அறிக்கை, ஈரான் 2015இல் செய்த அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி யுரேனியம் உற்பத்தி செய்ய முயல்வதாகக் குற்றம் சாட்டியது. மூன்று இடங்களில் இரகசிய அணு நடவடிக்கைகள் நடைபெறுவதாக அறிக்கை கூறியது. இதையடுத்து, நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு "ரைசிங் லயன்" என்ற பெயரில் ஜூன் 13இல் தாக்குதலைத் தொடங்கியது.

இந்தத் தாக்குதலில் ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள், வான் பாதுகாப்பு அமைப்பு, மற்றும் ஈரானின் புரட்சிகர காவல்ப்படை **(IRGC)** தளபதிகள் இலக்கு வைக்கப்பட்டனர். 200இற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. ஈரானின் முக்கிய தலைவர்களான மேஜர் ஜெனரல் முகம்மது பாகர், **IRGC** தலைவர் ஹொசைன் சலாமி ஆகியோர் கொல்லப்பட்டனர். தாக்குதலில் தலைநகர் டெஹ்ரானிலிருந்து 250 கி.மீ தொலைவிலுள்ள நதான்ஸ் அணு உற்பத்தி மையம் குறிவைக்கப்பட்டது, ஏனெனில் நதான்ஸ், ஈரானின் முக்கிய அணுச் செறிவூட்டல் தளமாகும்.

இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் இந்தத் தாக்குதலில் முக்கியப் பங்கு வகித்தது. ஈரானின் முக்கிய அணு விஞ்ஞானி, முன்னாள் அணுசக்தி ஆணையத் தலைவர் ஃபரிதூன் அப்பாஸி ஆகியோரும் இதில் பலியாகினர்.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக, ஈரானின் உச்சத் தலைவரும் மதகுருவுமான அயதுல்லா அலி கமேனி தொலைக்காட்சி உரையில் 150இற்கும் மேற்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவுவதாக அறிவித்தார். அதன்படி, இஸ்ரேலின் இரண்டாவது பெரிய நகரமான டெல் அவிவ் மீது ஏவுகணைகள் ஏவப்பட்டன.

மேலும், 100இற்கும் மேற்பட்ட ஆளில்லா ட்ரோன்களை இஸ்ரேல் மீது ஏவியது. ஆனால், இவற்றில் பெரும்பாலானவற்றை "அயர்ன் டோம்", "அரோ" போன்ற வான் பாதுகாப்பு அமைப்புகளால் இஸ்ரேல் தடுத்து நிறுத்தியது.

ஈரான் நேரடியாகவோ, அல்லது லெபனான், சிரியா, ஈராக், ஏமன் வழியாகவோ பதிலடி கொடுத்தால், இந்த பிராந்தியங்கள் கொடூரமான வன்முறையில் சிக்கும். இது மேற்கு ஆசியாவில் முழுவதும் தொடரும் பட்சத்தில் பெரும் போராக வெடிக்கலாம். உலகின் **20%** கச்சா எண்ணெய் செல்லும் வழியான **Strait of Hormuz** (ஹோர்முஸ் ஜலசந்தி)யை ஈரான் முடக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இதனால் கச்சா எண்ணெய் விலை விண்ணைத் தொடும் வாய்ப்பும் இருக்கிறது.

இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்கா முன்பே தகவல் பெற்றிருந்தாலும், இதில் தனக்குத் தொடர்பில்லை என்று கைவிரித்திருக்கிறது. ஆனால், அதன் படைகளை பாதிக்கும் எந்த மோதலும், அமெரிக்காவை நிச்சயமாகப் போருக்குள் இழுக்கலாம் அல்லது காசா போரில் வன்முறை வெறியாட்டம் முடிவடைந்த நிலையில் "அமைதித் தூதுவன்" போல நடித்த நாடகத்தை இங்கேயும் அரங்கேற்றலாம்.


ஆனால் ஈரான் ஒன்றும் காசா கிடையாது. ஈரான், தங்களிடம் சண்டையிடுவதற்கான ஆயுதங்கள் உள்ளதாக நம்புகிறது.

மற்றொரு முனையில், "ஈரானின் அணுசக்தித் திறனை முடிக்காமல் நிம்மதியாக வாழ முடியாது" என்று இஸ்ரேலும் கங்கணம் கட்டிக்கொண்டு அலைகிறது. "பதிலடிக்கு பதிலடி" என்று தொடரும் நடவடிக்கைகளால், இது உலகப் போருக்கு வித்திடும் நிகழ்வுகளுக்குத் தொடக்கப்புள்ளியாகக்கூட மாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: ராஜபார்ட் ரங்கதுரை
பாடகர் : டி. எம். சௌந்தரராஜன்
இசையமைப்பாளர் :எம். எஸ். விஸ்வநாதன்



அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
அது உனக்காக வாழ்ந்த.. உள்ளம் அல்லவோ.
அது உனக்காக வாழ்ந்த.. உள்ளம் அல்லவோ..

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்..

கையில் வைத்து காத்திருந்தால் காலடியில் காத்திருக்கும்
நன்றி மிக்க நாய்கள் உள்ள நாடு இது இதை சொந்தமின்றி
பந்தமின்றி
வந்த வழி நினைவுமின்றி பிள்ளைகளும் பிறந்திருக்கும் வீடு

ராம நாடகத்தில் மூன்று தம்பிகளின்
உள்ளம் கண்டேனே நல்ல பாரதத்தில் நான்கு தம்பிகளை நானும் கண்டேனே ராம நாடகத்தில்

மூன்று தம்பிகளின் உள்ளம் கண்டேனே நல்ல பாரதத்தில் நான்கு தம்பிகளை நானும் கண்டேனோ

அது நாடகமா?. இது நாடகமா அது நாடகமா?. இது நாடகமா?
இங்கு நான் காணும் வேஷங்கள்
கொஞ்சம் அல்லவே நான் இது போன்ற..
வேஷத்தில் வந்ததில்லையே

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்...

தங்கை எனும் இளைய கன்று தாய் வீடு வந்ததென்று
என்னுடைய நாடகத்தில் காட்சி..
அவள் கொண்டவனை பிரிந்து வந்து
கோலம் கொண்டு நிற்பதனை
கண்டதற்கு.. இன்னொருவன் சாட்சி

கண்ணில் நீர் பெருக சீதை நின்ற நிலை
கண்ணில் தெரிகிறது அண்ணன் கொண்ட துயர்
தம்பி லட்சுமணன் நெஞ்சில் எழுகிறதா

கண்ணில் நீர் பெருகசீதை நின்ற நிலை
கண்ணில் தெரிகிறதுஅண்ணன் கொண்ட துயர்
தம்பி லட்சுமணன் நெஞ்சில் எழுகிறதா

அது.. பாசமன்றோ இது வேஷமன்றோ
அது..பாசமன்றோ இது வேஷமன்றோ
அவன் ராஜாதி ராஜனுக்கு பிள்ளை அல்லவோ
இந்த ராஜபார்ட் ரங்கதுரை ஏழையால்லவா

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
அது உனக்காக.. வாழ்ந்த உள்ளம் அல்லவோ

அம்மம்மா தம்பி என்று நம்பி

# அணுகுண்டுகள் வெடித்தால் பூமி என்னவாகும்?

சமீபத்தில் ஹாலிவுட்டிலிருந்து வெளியாகியிருக்கும் "ஓப்பன்ஹைமர்" (Oppenheimer) திரைப்படத்தில் அணு ஆயுத சோதனையும். அதைக் கண்டுபிடித்தவரின் வாழ்க்கை வரலாறும் படமாக்கப்பட்டுள்ளது. நாம் திரைப்படத்துக்குள் செல்லவில்லை. அணுகுண்டுகள் பற்றிய வரலாற்றையும் அது பூமியில் வெடித்தால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும். பயன்பாடுகளைப் பற்றியும் பார்ப்போம்.

### உங்களுக்குச் சின்ன பையனைத் (Little boy) தெரியுமா?

"சின்னப் பையன்" என்ற செல்லப் பெயரை அமெரிக்கா ஒரு அணு குண்டுக்கு வைத்தது. அவர் பெயர்தான் சின்னப் பையன். ஆனால் இவனின் மொத்த எடை 4.400 கிலோ.

இவனை 1946 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா என்ற நகரத்தின் மேல் போட்டனர். அதன் விளைவு 1.6 கிலோமீற்றர் சுற்றளவிற்குள் இருந்த கட்டடங்கள் தரைமட்டமாயின.

அடுத்த மூன்று நாட்களில் "நாகசாகி" என்ற ஜப்பானிய நகரின் மீது குண்டன் என்ற இன்னொரு குண்டை போட்டனர். இதனால் 2.4 கிலோமீற்றர் சுற்றளவிற்கும் அதிகமான இடத்திலிருந்த கட்டடங்கள் தரைமட்டமாயின. இப்படி இரண்டாம் உலகப் போரில் மிகப்பெரிய ஆபத்துகளை ஏற்படுத்திய அணுகுண்டு எப்படி உருவானது தெரியுமா?

### அணுகுண்டின் வரலாறு....

1896 ஆம் ஆண்டு ஹென்றி பெர்குரல் (Henri Becquerel) தற்செயலாக யுரேனியம் என்ற தனிமம் கதிரியக்கத்தை உமிழ்கிறது எனக் கண்டறிந்தார். அடுத்த இரண்டு வருடங்களில் (1898ஆம் ஆண்டு) மேரிக் கியூரி தன் கணவருடன் இணைந்து ரேடியம் மற்றும் போலோனியம் என்ற இரண்டு கதிரியக்கத்தை உமிழும் தனிமங்களைக் கண்டறிந்தார். ஆல்பா. பீட்டா மற்றும் காமா எனக் கதிரியக்கம் மூன்று வகைப்படும். இதில் ஆல்பா கதிரியக்கம் மிகவும் மென்மையானது. இது நம் தோலில் மேல் பரப்பில் உள்ள இறந்த செல்களால் ஆன அடுக்கைக் கூட ஊடுருவ முடியாது.

இரண்டாவது பீட்டா கதிர்வீச்சு. இந்த கதிர்வீச்சு சில அடி தூரம் பயணிக்க வல்லது. ஆனால் அரை அங்குல ஈயத் தகடால் இந்த கதிர்வீச்சைத் தடுத்துநிறுத்த முடியும்.

காமா கதிர்வீச்சு மிகவும் சக்தி வாய்ந்தது. இது பெரிய காங்கிரீட் சுவரையும் ஊடுருவும் வல்லமை படைத்தது. தன் வலிமையால் தண்ணீர் மூலக்கூற்றையும் கூட உடைக்கும் சக்தி படைத்தது. எக்ஸ்ரேயும் இந்த வகையைச் சேர்ந்ததுதான். இந்த காமா கதிரியக்கத்தைக் கொண்டு மரபணுவான DNAயை உடைக்க முடியும். பின்னர் இந்த உடைந்த DNA வை எப்படிப் பழுதுபார்க்கிறது என்பதையும் கண்டறிய முடியும். இந்த வகை ஆராய்ச்சி புற்றுநோய் பற்றி அறியவும் புற்றுநோய் மருத்துவத்திற்கு மிகவும் அவசியம்.

அணுக்கள் கதிரியக்கத்தை உமிழ்கின்றன என்ற கண்டுபிடிப்புகள் அணுக்களுக்குள் அபரிமிதமான ஆற்றல் புதைந்துள்ளது என படமிட்டுக் காட்டியது. அதனால் ஆற்றலுக்கும் அணுக்களுக்கும் உள்ள தொடர்பை ஆல்பர்ட் ஐன்ஸ்டின் கண்டறியப் பாடுபட்டார். இறுதியாக 1905 ஆம் ஆண்டு $E=mc2$ என்ற சமன்பாட்டை உருவாக்கினார். இந்த சமன்பாடு அணுகுண்டு உருவாக்கப் பெரிதும் பயன்பட்டது. பின்னர் 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா. தான் தயாரித்த அணுகுண்டை முதல் முறையாகச் சோதனை நடத்தியது.

### சூரியனில் வெடிக்கும் அணுகுண்டுகள்...

சூரியனில் ஒவ்வொரு வினாடியும் பல கோடான கோடி அணுகுண்டுகள் வெடிக்கின்றன. இந்த வையகம் அணுக்களால் ஆனது. இந்த அணுக்களை உடைத்தாலும் நிறைய ஆற்றல் வெளிப்படும். அதேபோல் ஓர் அணுக்குள் இன்னொரு அணுவைப் புகுத்தி ஒரு பெரிய அணுவை உண்டாக்கும் போதும் அபரிமிதமான ஆற்றல் வெளிப்படும்.

உதாரணமாக நமது சூரியன் ஹைட்ரஜன் அணுக்களால் ஆனது. சூரியனில் இந்த சிறிய ஹைட்ரஜன் அணுக்கள் ஒன்றையொன்று விழுங்குகிறது. அதனால் சற்று பெரிய ஹீலியம் அணு உருவாகிறது. இந்தத் தருணத்தில் நிறைய கதிரியக்க ஆற்றல் உருவாகின்றன. சூரியனுக்கு அருகில் இந்த கதிரியக்கம் மிகவும் வலிமையானதாக உள்ளது.

(அடுத்த வாரம் தொடரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன-மதபேதம் உலகை அழிக்கிறது



இந்த உலகை இறைவன் படைத்தானா? இல்லை இயற்கை படைத்ததா...? என்ற கேள்வி நமக்குத் தேவையில்லை. படைக்கப்பட்டவைகள் அனைத்துமே இப்போதுள்ள மக்கள் தொகையினருக்கு மேல், இன்னும் பத்து மடங்கு மக்கள் தொகையினர் வாழ்வதற்கு போதுமான அளவிற்கு அனைத்துமே நிறைவாகப் படைக்கப்பட்டிருகின்றது. அப்பிடியிருந்தும் ஏன் இன்னும் மக்களில் ஒருபகுதியினர் அளவிற்கு அதிகமாக உணவு உண்டு மரணிக்கிறார்கள்...? இன்னொரு பகுதியினர் உணவே இல்லாமல் பட்டினியினால் சாகின்றார்கள்...? இதை உற்றுநோக்கும் போதுதான், இந்த உலகம் கார்ல் மார்க்ஸை தேடிப் போகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

ஆம்! இந்த உலகத்தில் நடக்கும் சம்பவங்கள் அதைத்தான் நிரூபிக்கின்றன. "முதலாளித்துவ வர்க்கம் தங்கள் அழிவைத் தங்கள் கருவறையிலேயே வைத்து வளர்க்கின்றன" இந்த உலகம் எந்தவிதமான "பிரிவினை" வாதங்களும் இல்லாமல், "சமத்துவக் கொள்கையை கடைப்பிடித்தால் மட்டுமே, உய்யும்."

இன, மத, நிற, சாதி, மொழி, எல்லைகள் என்று இந்தப் பிரிவினைகள் நீண்டு செல்கின்றது. இந்த உலகத்தில் மக்கள் படும் துன்ப துயரங்களுக்கு இதுவே மூலகாரணம். சமீபத்தில் நடந்த காஷ்மீரில் அப்பாவி மக்கள் படுகொலைக்கும் "நீங்கள் எந்த மதம்? என்று கேட்டே சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இந்த அளவில் "மதவாதம்" உச்சம் பெற்றிருக்கின்றது. இலங்கையில் நடந்த தாக்குதலில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டதற்கும் மதவாத பிரிவினையே அடிப்படைக் காரணம்.

ஹமாஸ் அமைப்பால் இஸ்ரேலில் ஆரம்பித்த போர், இப்போது ஈரானில் உச்சம் பெற்றிருக்கின்றது. இந்தப் போர் மூன்றாம் உலக யுத்தம் தொடங்கி விட்டது என்பதையே காட்டி நிற்கின்றது. காரணம் வடகொரியா பகிரங்கமாகவே ஈரானுக்கு ஆதரவு தெரிவித்து விட்டது. சீனாவும், ரஷ்யாவும் சிலேடையாக ஆதரவு தெரிவித்துள்ளன. அமெரிக்காவால் அணுகுண்டு தயாரிக்க கற்றுக்கொடுத்து வளர்த்தெடுக்கப்பட்ட செல்லப்பிள்ளை. பாகிஸ்தான்: "முஸ்லீம்களுக்கும் அரபு நாடுகளுக்கும் ஆபத்து வரப்போகின்றது: ஈரானுக்கு ஆதரவாக ஒன்றுபட வேண்டிய காலகட்டம் இதுவே" என்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நிலையில் ஏற்கனவே ஒன்று சேர்ந்த மேற்கு நாடுகள் ஓரணியாகவும் அரபு முஸ்லீம் நாடுகளோடு சீனா, ரஷ்யா, வடகொரியா போன்ற நாடுகள் ஓரணியாகவும், உலக யுத்தத்தை சந்திக்கப் போகின்றன. இதில் இந்தியா எந்த அணி என்பதே கேள்விக்குறி. பனிப்போர் முடிவிற்கு முன்னர் இந்தியாவின் மிகவும் நெருங்கிய நண்பன் ரஷ்யா. இதன் காரணமாகவே பாகிஸ்தானுக்கு அணுகுண்டு தயாரிக்க அமெரிக்கா உதவியது. தற்போது இந்தியா, அமெரிக்காவோடு நெருங்கி செயற்பட்டாலும், இந்தியாவினுடைய உண்மையான நண்பன் ரஷ்யாதான். ஆனால் பாகிஸ்தான், சீனா பரம எதிரிகள். இந்த நிலையில், இந்தியா உலகப் போரில் பங்கெடுக்காமல் நடுநிலை வகிக்கலாம். அப்படி நடுநிலை வகித்தால், எதிர்காலத்தில் எந்த அணியின் உதவியும் இல்லாமல் தனித்து விடப்படலாம். இது இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

எது எவ்வாறு இருப்பினும் இன்றைய உலக நடப்பியல் நிலவரப்படி உலகை முழுமையாக அழிக்கும் ஆற்றல்மிக்க அணுகுண்டுகள் நிறைந்துள்ள இந்த உலகைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால், எந்த விதமான பிரிவினையுமற்ற "இந்த உலகம் மனிதர்களுக்கு சொந்தமானது" என்ற உயரிய கொள்கையை உலகுக்கு கூறும் கார்ல் மார்க்ஸ் எம் கையில் தந்த சமத்துவக் கொள்கையை, உலகத் தலைவர்கள் கடைப்பிடித்தால் மட்டுமே, இந்த உலகையும், மக்களையும் காப்பாற்ற முடியும்.

**சாந்தையூரிவன் - தி.ராம்குமார்**

# ஆச்சி அறிவுரை



## மரண ஊர்வலத்தில் வெடி கொழுத்தும் புதுக்கலாசாரம்

**பேராண்டி...**

**மாவை.நா.கஜேந்திரன்**

ஒருத்தரின்ர இறப்பு எண்டுறது இந்தச் சமூகத்திற்கு நல்ல கருத்துக்களையும் கனவுகளையும் விட்டுச் செல்லுற பயணமா இருக்கவேணும் அதுதான் மனிதன் தான் வாழ்ந்த வாழ்க்கைக்கான அர்த்தமாக இருக்கும்.

உன்ர தாத்தா ஒருநாளும் வருத்தமெண்டு படுக்கையிலை கிடந்ததில்லை. ஆனாலும் அடிக்கடி சொல்லுவார், நான் செத்தால் எந்த ஆடம்பரமும் இருக்கக்கூடாது. ஒரு திருவாசகம் போதும். என்ர கட்டை வேகும் எண்டு. அவரின்ர ஆசை எதுவோ, அதுபோலத்தான் எல்லாம் நடந்தது. அப்ப நீ கைக்குழந்தை. உனக்கு எதுவும் தெரியாதெல்லோ, அதுதான் சொன்னன்.

பேராண்டி, ஒரு இனத்தை அழிக்கவேணும்மெண்டால் அந்த இனத்தின்ர பண்பாடு, கலாசாரத்தை அழிச்சாலே போதும். அந்த இனம் தானே அழிஞ்சுவிடும் எண்டு சொல்லுறவையள். அது நூறு விகிதம் சரிபோலத் தான் இருக்குது.

ஓம்.. இப்ப எங்கட கலாசாரத்துக்குள்ள புதுசு புதிசா என்னென்னமோ எல்லாம் செய்யினம். இதுகளை நினைக்க எங்கட இனத்தின்ர எதிர்காலம் எப்படி இருக்குமோ எண்டு திகைப்பா இருக்குது. மரண வீடுகளிலை வெடி கொழுத்துற கலாசாரத்தை முதலில நிறுத்தவேணும். மரண வீட்டிலை செய்யிற சடங்குகள், சம்பிரதாயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கும்.

ஆனால் இந்த வெடி கொழுத்துறதுக்கு ஏதும் காரணம் இருக்குதோ எண்டு கேட்டால், எதுவும் இல்லை எண்டுறதுதான் முடிவு. பிரேத ஊர்வலம் நடக்கேக்கை வெடி கொழுத்துறது இளைஞர்களுக்கு களிப்பு மிக்க விடயமாகப் போச்சுது.

வீதிகளிலை இப்படி வெடியைக் கொழுத்திப் போட்டால், அதாலை எவ்வளவு விளைவுகள் ஏற்படும் எண்டு உந்த நாசமாப் போனதுகளுக்குத் தெரியமாட்டுதாமே.

எங்கட இனம் வெடியால பட்டபாடு தெரிஞ்சால் உந்த நினைப்பு வருமோ! எந்தநேரம் செல் வந்து வீழ்ந்து வெடிக்கும், எந்தகணம் பொம்பர் வந்து குண்டு போடும், எப்ப ஆமிக்காரன் சுடுவான் எண்டு தெரியாமல் பதை பதைச்சு பங்கருக்குள்ள வாழ்ந்த காலங்கள், உந்த வெடி கொழுத்துறதுகளுக்குத் தெரியுமோ?

தங்கட குடும்ப உறுப்பினரை இழந்து தவிச்சு நிக்கிற குடும்பத்தை நினையாமல் இப்பிடி வெடி கொழுத்தி மகிழ்ச்சி கொண்டாடுறது மனிசர் செய்யிற வேலையோ? இது எங்கட கலாசாரத்துக்குள்ள இல்லாத ஒண்டு. இதை நாங்கள் செய்ய, எங்கட அடுத்த சந்ததி இதுதான் எங்கட பாரம்பரியம் எண்டெல்லோ நினைச்சிடும். இப்பிடி சமூகத்தைப் பாதிக்கிற மாதிரி நடந்து கொள்ளுறவையளை பொலிஸாரும் கட்டுப்படுத்தலாம். ஆனால் அவை அதைச் செய்யமாட்டினம். கெட்டொழிஞ்சு போறது வேற இனம் தானே எண்ட நினைப்பு அவையளைச் செய்யவிடாது.

பேராண்டி, எப்பிடி இருந்த எங்கட இனம் இப்ப, இப்பிடி மாறிக்கொண்டிருக்குதெண்டு நினைக்க கவலை நெஞ்ச அடைக்குது. எது எழுதப்பட்டதோ அதுதானே நடக்கும். வேற எதைச் சொல்ல முடியும்.

**ஆச்சி வருவா...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம்



# உன் கண்களைத் தழுவட்டுமே...

தூக்கம் சார்ந்த பிரச்சினை என்பது பல வகைகளாக இருக்கும். சரியான நேரத்திற்கு தூக்கம் வராமல் இருப்பது, தூங்கினாலும் இடையில் விழித்துக்கொள்வது, நீண்டநேரம் தூங்கிக்கொண்டே இருப்பது, காலை எழுந்தாலும் சரியாகத் தூங்காதது போன்ற உணர்வு ஏற்படுவது, எந்நேரமும் தூக்கக்கலக்கத்துடனே இருப்பது போன்ற பிரச்சினைகளை தூக்கக் கோளாறு என குறிப்பிடலாம்.

தற்போது பலருக்கும் படுத்தவுடன் தூக்கம் வருவதில்லை. அதற்கான காரணம் அவர்களுடைய பழக்க வழக்கங்கள்தான். படுக்கையில் படுத்துக்கொண்டு "இன்னும் தூக்கம் வரவில்லையே" என்று அதைப்பற்றி சிந்தித்து அதையொரு கவலையாக்கிக்கொண்டு இருப்பார்கள். படுக்கச் சென்றவுடன் இந்தச் சிந்தனையை மறந்துவிட வேண்டும். எதையும் யோசிக்காமல் இருந்தாலே, படுத்தவுடன் நல்ல தூக்கம் வரும். தவிர, தூங்குவதற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பே உணவு உட்கொள்ள வேண்டும். 2 மணி நேரத்திற்கு முன்பே செல்போன் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். இருட்டான அறையில் தூங்க வேண்டும். இப்படி சீரான தூக்கமும் தினமும் உடற்பயிற்சியும் இருந்தாலே போதுமானது.






# அடுக்களைப் பக்கம்

1. அவகாடோ பழத்தை வெட்டிய உடனே பயன்படுத்தாமல் இருந்தால், உட்புறத்தில் சிறிது எண்ணெய் தடவி எடுத்து வையுங்கள். உட்புறம் கறுத்துப் போகாமல் இருக்கும்.
2. இனிப்புப் பலகாரங்கள் தயாரிப்பதற்காக சர்க்கரைப் பாகு தயாரிக்கும் போது சில துளி எலுமிச்சைச்சாறு சேர்த்தால், பாகு இலகுவாக இருக்கும்.
3. உருளைக்கிழங்கை மசித்துச் செய்யும் உணவுகளில் சிறிதளவு ஓமம் கலந்து செய்ய எளிதில் செரிமானமாவதுடன் நல்ல மணத்துடனும் இருக்கும். வாய்வுத் தொல்லை நீங்கும்.
4. இட்லி மாவு கெட்டியாக இருந்தால், இட்லி சற்று கனமாக வரும். இட்லி மாவுடன் உப்பு சேர்த்துக் கரைக்கும்போது கொஞ்சம் மாவைக் கையில் எடுத்துச் சற்று உயரத்தில் இருந்துவிட்டால் மாவு ஒரே சீராகப் பாத்திரத்தில் விழ வேண்டும். விட்டு விட்டு அல்லது மிகவும் வேகமாக விழக் கூடாது. மாவு இந்தப் பக்குவத்தில் இருந்தால் இட்லி மிகவும் மிருதுவாக வரும்.
5. சிலர் தேங்காயைத் துண்டுகளாக்கி, மிக்ஸியில் துருவல் போல் அரைத்துக்கொள்வார்கள். சில சமயம் அவை சீராக மசியாது. தேங்காய்த் துண்டுகளை வெறும் வாணலியில் அரை நிமிடம் வதக்கினால், அவற்றில் உள்ள ஈரப்பதம் காய்ந்துவிடும். இப்போது மிக்ஸியில் சில சுற்றுகள் சுற்றினால், பூப்பூவான தேங்காய்த்துருவல் தயார்.
6. பூசணியைச் சமைக்கும்போது விதைகளுடன் கூடிய ஜவ்வு போன்ற பகுதியைத் தூக்கி எறிந்துவிடாமல், அதைத் தோசைக்கு அரைக்கும் மாவோடு சேர்த்து அரைத்தால், மிருதுவான தோசை கிடைக்கும்.

* முருங்கைக்கீரையைச் சமைக்கும் போது சிறிதளவு சர்க்கரையைக் கலந்து சமைத்தால், ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளாமல் உதிரியாக இருக்கும்.
* கரைத்த பஜ்ஜி மாவை மிக்ஸியில் அடித்து பஜ்ஜி போட்டால் மிருதுவாக உப்பி வரும்.

## சமைப்போம் சுவைப்போம்



# பலாப்பழத் தோசை



### தேவையானவை :

1. அரிசி – அரை கப்
2. பலாச்சுளைகள் (கொட்டை நீக்கியது) – ஒரு கப்
3. வெல்லம் – கால் கப்
4. தேங்காய்த் துருவல் – கால் கப்
5. உப்பு – 1/8 டீஸ்பூன்
6. நெய் – தேவையான அளவு




### செய்முறை

அரிசியை 1 - 2 மணி நேரம் கழுவி ஊறவைக்கவும். பலாச்சுளைகளைச் சிறிய துண்டுகளாக நறுக்கவும். ஊறிய பிறகு, தண்ணீரிலிருந்து அரிசியை வடிகட்டி, வெல்லம், தேங்காய்த்துருவல் மற்றும் உப்பு சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும். மாவைக் கிண்ணத்திற்கு மாற்றவும். இப்போது பலாப்பழத்தை மென்மையான கூழாக அரைத்து, அரிசிக் கலவையில் சேர்த்து, ஒன்றாகக் கலந்து இனிப்பு சரிபார்க்கவும். ஒரு தவாவைச் சூடாக்கி, சிறிது நெய் தடவி, மாவை ஊற்றிப் பரப்பவும். குறைந்த தீயில் இருபுறமும் சுட்டெடுக்கவும். தோசை மிகவும் மென்மையாக இருக்கும். எனவே, அதை உடையாமல் பார்த்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவின் சாபத்தைப் போக்கி கடாயுதம் ஏந்திய கறுப்பு நிலா




அவுஸ்திரேலியாவை வீழ்த்தி டெஸ்ட் சாம்பியன்ஸ் கடாயுதத்தை கையில் ஏந்தி நிற்கிறார் தென்னாப்பிரிக்க கப்டன் தெம்பா பவுமா. ஒட்டுமொத்த தென்னாப்பிரிக்க அணியுமே கொண்டாடப்பட வேண்டியதுதான். ஆனால், அதில் பவுமா இன்னும் கொஞ்சம் கூடுதலாக கொண்டாடப்பட வேண்டும். பவுமா கறுப்பினத்தைச் சேர்ந்தவர். தென்னாப்பிரிக்க அணியின் முதல் முழுநேர கறுப்பின கப்டன் அவர்.

கேப்டவுனிலிருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் இருக்கிறது லங்கா என்கிற ஊர். லங்கா ஓர் கறுப்பின நகரம். 99% கறுப்பின மக்கள் மட்டுமே வாழக்கூடிய பகுதி. தென்னாப்பிரிக்காவில் நிறவெறி உச்சக்கட்டத்தில் இருந்த போது உழைக்கும் வர்க்கமான கறுப்பினத்தவர்கள் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். கேப்டவுனில் வேலை பார்க்கக்கூடிய கறுப்பினத்தவர்கள் அங்கே தங்க முடியாது. தங்களின் அன்றாடப் பணிகளை முடித்துவிட்டு அவர்கள்நகருக்கு வெளியே சென்றுவிட வேண்டும்.

அப்படி நகருக்கு வெளியே அவர்கள் குழுவாக தங்கியிருந்த இடம்தான் லங்கா. அங்கேதான் தெம்பா பவுமாவும் பிறந்தார். ஏழ்மை குடிகொண்டிருக்கும் பின்தங்கிய பகுதி. மக்கள் நிறவெறியால் அடக்கப்பட்டனர். அரசே அவர்களை ஒடுக்கியது. இளம் சிறுவர்களின் வாழ்க்கை ஒளியற்ற இலக்கை நோக்கி நகர்ந்தது. மண்டேலாவின் எழுச்சிக்குப் பிறகுதான் பவுமா பிறக்கிறார்.

ஆனாலும் ஆண்டாண்டு காலமாக முதுகில் ஊறிக் கொண்டிருந்த நிறவெறி கிருமியின் தாக்கம் இன்னமுமே அந்த மண்ணிலிருந்து அகலவில்லை. பவுமாவின் அப்பா ஒரு பத்திரிகையாளர். கிரிக்கெட் மீது பேரார்வம் கொண்ட உறவினர்கள் அவருக்குண்டு. இதனால் அந்த லங்காவின் இருளைக் கிழித்துக் கொண்டு வெளியே வர பவுமாவுக்கு ஒரு பிடிப்பு கிடைக்கிறது.

கறுப்பினத்தவர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை தகர்க்கும் வகையில் தென்னாப்பிரிக்க கிரிக்கெட்டிலும் இட ஒதுக்கீடு முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தென்னாப்பிரிக்க அணியில் குறைந்தபட்சமாக 2 வீரர்களாவது கறுப்பினத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த இட ஒதுக்கீடுதான் கிரிக்கெட்டில் கறுப்பினத்தவர்களின் பங்களிப்பையும் உறுதி செய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்தப் போட்டிக்கு முன்பாக பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் கூட, "கறுப்பினத்தைச் சேர்ந்த வீரர்கள் ஒன்றிரண்டு போட்டியில் ரன்களோ விக்கெட்டுகளோ எடுக்காமல் விட்டால் கூட கோட்டா ப்ளேயர்கள் என முத்திரைக் குத்தி விமர்சிக்கத் தொடங்கிவிடுவார்கள்." எனக் கூறியிருக்கிறார்.

இதையெல்லாம் கடந்துதான் பவுமா இன்னும் களத்தில் நிற்கிறார். பவுமாவின் வெற்றி, பவுமாவின் எழுச்சி ஒட்டுமொத்த கறுப்பினத்துக்குமேயான நம்பிக்கை, உந்துசக்தி. தென்னாப்பிரிக்க டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பதே பவுமாவுக்கு போராட்டமாகத்தான் இருந்தது. மற்ற வீரர்கள் காயமடைகையில் அவர்களுக்கு பதிலாக ஒன்றிரண்டு போட்டிகளில் ஆடும் வாய்ப்பபே அவருக்கு கிடைக்கிறது. பவுமா ஒன்றும் அசாதாரண ஆட்டத்தை ஆடிவிடவில்லை.

> "பவுமா பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு ஆசிரியர். "இன்னும் 15 ஆண்டுகளில் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?" என்பதை எழுதிக் கொடுங்கள் எனக் கூறியிருக்கிறார். "இன்னும் 15 ஆண்டுகளில் தென்னாப்பிரிக்க அணியின் ஜெர்சியை அணிந்து கிரிக்கெட் ஆட வேண்டும்" என பவுமா தன்னுடைய கனவை எழுதியிருக்கிறார்."

அவர் ஆடும் விதமும் அத்தனை வலுவானதாக இருக்காது. அவர் ஹார்ட் ஹிட்டர் கிடையாது. ஆனால், க்ளாஸாக ஆட தெரியும். ஒவ்வொரு ரன்னுக்கும் உயிரைக் கொடுத்து உழைப்பைக் கொட்டும் தீர்க்கம் அவரிடம் இருந்தது.

2016 இல் அவர் பிறந்த லங்காவுக்கு அருகே இருக்கும் நியூ லேண்ட் மைதானத்தில் இங்கிலாந்திற்கு எதிராக தன்னுடைய முதல் சதத்தை அடித்தார். தென்னாப்பிரிக்க கிரிக்கெட் வரலாற்றில் கறுப்பின வீரர் ஒருவர் அடித்த முதல் சதம் அதுதான். மைதானத்தில் கூடியிருந்த லங்கா மக்கள் ஆனந்த கண்ணீர் விட்டு தங்களின் சாயலாக வென்று நிற்கும் பவுமாவை கொண்டாடினர். இதேமாதிரி எத்தனையோ சாதனைகளை முதல் நபராக பவுமா செய்திருக்கிறார். ஆனாலும் அவரை கொண்டாடியதைவிட ஏளனம் பேசிய சம்பவங்களே அதிகம் நடந்திருக்கிறது.

இப்படியான வலிகள் நிறைந்த பயணத்தை கொண்ட ஒரு ஆள்தான் இந்த அணியை வழிநடத்த வேண்டும் என முடிவெடுத்தவர் தென்னாப்பிரிக்க அணியின் பயிற்சியாளர் கான்ராட். பவுமாவிடம் ஒரு உறுதித் தன்மையும் திடமான மனவலிமையும் இருப்பதையும் அறிந்தே கான்ராட் இந்த முடிவை எடுத்தார். அந்த முடிவுதான் இன்றைக்கு தென்னாப்பிரிக்காவுக்கு சாம்பியன்ஷிப்பை வென்று கொடுத்திருக்கிறது.

## தெளிவே என் சிந்தனையுள்... 15



ஒருவனுக்கு இரவில் தூக்கமே வருவதில்லை. படுத்தால் கட்டிலுக்கு அடியில் கொடிய பாம்புகள், கொடூரப்பேய்கள், அகோர முனிகள் இருப்பதாய் உணர்ந்தான்.

அதனால் அவன் பயத்தில் நடுங்கினான். தூங்குவதே இல்லை. இது தொடர்ந்து சென்றதால் அவன் நோயாளியாகினான்

அவன் செல்லாத மருத்துவர்களே இல்லை. எத்தனை இலட்சங்களைச் செலவழித்தும் அவனால் தூங்க முடியவில்லை.

ஒரு நாள் அவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தான். அவனை உறவினர்கள் ஏன் இன்று மகிழ்வாய் இருக்கிறாய் என்று கேட்டனர்.

அதற்கு, நீண்ட நாட்களின் பின் இன்று இரவுதான் உறங்கினேன். என் மனதுக்கு நிம்மதி கிடைத்து விட்டது. நான் விடுதலை பெற்றவனாய் உணர்கின்றேன் என்றான். எப்படி உன்னால் தூங்க முடிந்தது என உறவினர்கள் கேட்கவே, படித்த மருத்துவர்களால் முடியாத ஒன்றை ஒரு சாதாரண தச்சனால் முடிந்திருக்கிறது என்றான்.

தனது பிரச்சினையை தச்சனிடம் கூறினேன். தச்சனோ எனது கட்டிலின் நான்கு காலையும் வெட்டி விட்டான். அதன்பின் எப்படி கொடிய நாகங்களும், பேய்களும் கட்டிலுக்கடியில் இருக்கமுடியும் என்றான்.

அன்பானவர்களே! எம்மில் பலர் இப்படித்தான். எமக்கான பிரச்சினைகளுக்கு தீர்வாக சில மேலோட்டமான முடிவுகளை எடுத்துவிடுகிறார்கள். அவை எமக்குச் சரியான தீர்வாகத் தெரியும்.

ஆயினும் அடுத்தவர்களுக்கு அவை நகைப்புக்குரியதாகவே இருக்கும். நாம், நமது பிரச்சினைகளை சரியாகக் கையாளும் வெற்றியாளராக இருக்கப் போகிறோமா? அல்லது எமது பிரச்சினைகளுக்கான தீர்வு அடுத்தவர்களுக்கு நகைப்புக்குரியதாய் இருக்கப் போகிறதா? என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ்.கோட்டை

60

## செங்கை ஆழியான்

புலிகள் விலகுமாறு கூறியதும் பொலிஸாரில் ஒரு சிலர் தவிர மற்றவர்கள் அனைவரும் யாழ்ப்பாணக் கோட்டைப் பக்கமாக ஓடிக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

ஒருசிலர் யாழ்ப்பாணப் பக்கமாக ஓடிச்சென்றனர். எல்லோராலும் யாழ்ப்பாணப் பக்கமாக ஓடிச் செல்ல முடியவில்லை ஏனெனில் அச் சுற்றாடலில் துப்பாக்கி வேட்டுக்களும் சன்னங்களின் பரவலும் காணப்பட்டன. நூறு தமிழ் பேசும் பொலிஸார் வரையில் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். நடக்கப்போவது தெரிந்திருந்தால் சில வேளைகளில் அதற்குள் புகாது இருந்திருப்பர்.

கோட்டையின் பிரதான வாயில் அன்று மூடப்பட்டது. எரிப்பதற்காகக் கோட்டைக்குள் பறிக்கப்பட்டிருந்த இரண்டு லொறிச் சுமை விறகுகள் பிரதான வாயின் முன் அடுக்கப்பட்டு மூடப்பட்டது. வாகனங்கள் வாயிலோடு அரணாக நிறுத்தப்பட்டன.

*16. ஜூன், யுத்த நிறுத்தம் அமுல் என ஸ்ரீலங்கா அறிவித்த அன்றே யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து கண் மூடித்தனமாக ஷெல் வீச்சுக்கள் பரவலாக இடம் பெற்றன. யாழ்ப்பாணம் நகரம் திகிலடைந்தது. மக்கள் சிதறி ஓடினர். கோட்டைச் சுற்றாடலில் நின்றிருந்த மூன்று போராளிகள் மரணமடைய நேர்ந்தது. அத்துடன் டாக்டர் சபாரத்தினம் என்பவர் உட்பட மூன்று பொதுமக்களும் பலியாகினர்.*

*25 பேர் வரையில் கடுங் காயங்களுள்ளாகினர். புலிகள் தமது ஏவுகணைகளை யாழ் கோட்டை நோக்கிச் செலுத்தினர்.*

*18. ஜூன். ஸ்ரீலங்கா அரசு யுத்தப் பிரகடனத்தைச் செய்தது. அத்துடன் தளபதிகளுக்கு அதிக அதிகாரத்தையும் வழங்கியது. ஒவ்வொரு பிராந்திய ஸ்ரீலங்கா இராணுவத்தளபதிகள் தாம் விரும்பியவாறு தீர்மான மெடுக்க அரசு அனுமதித்தது. ஸ்ரீலங்கா அரசின் யுத்தப் பிரகடனத்தை அடுத்து விடுதலைப்புலிகள் யாழ் கோட்டை மீதான தாக்குதல்களை ஆரம்பித்தனர்.*

அன்றிரவு 12-30 மணிக்கு யாழ்ப்பாண நகரத்தையும் அதன் சுற்றாடலையும் அதிர வைத்து எல்லோரையும் விழிக்க வைத்த பெரும் குண்டு வெடிப்புச்சத்தம் கோட்டைப்பக்கமிருந்து எழுந்தது. கரும் புலிகள் மருந்து திணிக்கப்பட்ட லொறி ஒன்றினை கோட்டையின் கடற்கரைப்பக்கமான, காங்கிரிட் கற்களால் பலமாக அடைக்கப்பட்ட கோட்டையின் நீர்வாயிலில் (Water Gate) மோதினர்.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




இதைக் கேட்ட சேந்தன் இளையபல்லவனை எரித்து விடுபவன் போல் பார்த்துவிட்டு அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வெகு வேகமாகச் சென்றுவிட்டான். அதுவரை இளையபல்லவன் இதழிலிருந்த ஏளனச் சிரிப்பு மறைந்தது. அதன் இடத்தைத் தீவிர யோசனை ஆக்கிரமித்துக் கொண்டது. அறையின் மூலை மஞ்சத்திலிருந்த மதுக் குப்பியைக் கையிலெடுத்துக் கொண்ட இளையபல்லவன் காவலரில் ஒருவனை அழைத்து அமீரை உடனே கூப்பிடும்படி உத்தரவிட்டான்.

இரவின் முதல் ஜாமம் முடியும் நேரத்தில் வந்த அமீரை நோக்கிய இளையபல்லவன், "அமீர்! பலவர்மன் நம்மைச் சந்தேகிக்கிறான்," என்றான். "எதைப்பற்றி?" என்று அமீர் கேட்டான்.

"ஓலைபற்றிச் சேந்தனை ஏதோ விசாரித்திருக்கிறான்." "உண்மை தெரிந்துவிட்டதா?" "இல்லை, இன்னும் இல்லை. ஆனால் பலவர்மனைப் போன்ற ஒரு வஞ்சகனுக்கு உண்மையை ஊகிப்பது கஷ்டம் அல்ல."

"இன்றிலிருந்து பதினான்காவது நாள் இரவு நடவடிக்கை தொடங்க வேண்டும்." "அன்றுடன் ஒன்றரை மாத காலம் ஓடிவிடுகிறது." "சரியாயிருக்கும்."

இருவர் கண்களும் சந்தித்தன. "அதற்குள்..." என்று கவலை மிகுந்த குரலில் கேட்டான் அமீர் "எல்லாம் தயாராகிவிடும்." அன்றிரவு? பலப் பரீட்சை நடக்கும். நமது பலம் அதிகமா பலவர்மன் பலம் அதிகமா என்பது புலப்பட்டுவிடும்.

புலப்பட்டுவிடும். ஆனால் அதனால் எத்தனை பேர் உயிர்... என்று வருந்தினான் அமீர். "பெரும் சாதனைகளின் அஸ்திவாரமே தியாகம்" என்று ஆழ்ந்த மந்திரம் போல் ஒலித்த குரலில் கூறினான் இளையபல்லவன். இருவரும் நினைத்து நினைத்து ஓரளவு அச்சமும் பட்ட அந்த இரவு மெல்ல மெல்ல வந்தது.

### இனிப்பும் கசப்பும்

அக்ஷயமுனையில் இறுதியாக நடவடிக்கை தொடங்க வேண்டுமென்று இளையபல்லவன் அமீரு டன் திட்டமிட்ட இரவுக்கும் அந்தத் திட்டப்படி நடவடிக்கை தொடங் கப்பட்ட இரவுக்கும் இடையே விரவிக்கிடந்த பதின்மூன்று நாட்களைப் படைத்தலைவன் பலவிதமாகக் கழித்தான்.

அவன் போக்கும் செய்கையும்

# கடற்புறா

உத்தரவுகளும் நாளுக்கு நாள் வித்தியாசப்பட்டு வந்தாலும் சில சமயங்களில் ஒன்றுக்கொன்று அடியோடு முரண்பட்டிருந்தாலும் எந்த யோசனையுடன் எதை உத்தேசித்து அவன் நடந்துகொள்கிறான் என்பது, அக்ஷயமுனைவாசிகளுக்கு மட்டுமல்ல, பலவர்மனுக்கும் மஞ்சளழகிக்கும் கூடப் புரியாத புதிராயிருந்தது.

சில சமயங்களில் அவன் உத்தரவுகளைப் பிறப்பித்த போது பூரணமாக மது அருந்தியிருந்ததாலும் ஏதாவது யோசனையோ உத்தேசமோ அவனுக்கு இருக்கிறதா என்று சந்தேகங்கூடப் பலருக்கும் ஏற்படவே இத்தகைய குடிகாரனை நம்பியிருப்பது உசிதமா என்ற சந்தேகங்கூட அக்ஷயமுனை மக்கள் மனத்திலும் கடற்கரைக் கொள்ளைக்காரர் இதயத்திலும் எழுந்திருக்கவே செய்தது.

அவன் இட்டது போன்ற உத்தரவுகளை வேறு யார் இட்டிருந்தாலும் அக்ஷயமுனை மக்களும் கொள்ளைக்காரரும் புறக்கணித்திருப்பார்கள்.

ஆனால் என்ன காரணத்தாலோ இளையபல்லவன் இட்ட உத்தரவுகளை அத்தனை அவநம்பிக்கையிலும் நிறை வேற்றுவதிலேயே முனைந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

455

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## முடக்குவாதத்திலிருந்து எம் மூட்டுக்களைப் பாதுகாக்க...

இந்த மருந்துகளை சில சமயம், தினமும் எடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. சில மருந்துகளை வாரத்திற்கு ஒருமுறை எடுக்கக்கூடிய நிலைமையும் காணப்படுகின்றது. அதேபோல், இந்த மருந்துகளை ஊசி மூலம் ஏற்றக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது. இந்த ஊசி மூலம் மருந்துகள், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செலுத்தக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

இந்த மருந்துகளில், முக்கியமானதொரு First line treatment மருந்தாக காணப்படுவது, Methotrexate எனும் மருந்தாகும். இதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், நீங்கள் மருந்தகத்திற்குச் சென்று இந்த மருந்தை வாங்கும் போது, ஏன் இந்த மருந்தை பாவிக்கிறீர்கள்... உங்களுக்கு புற்றுநோய் இருக்கிறதா என மருந்தாளர் உங்களிடம் வினவலாம்.


இந்த மருந்தானது, பலவிதமான நோய்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. அதில் ஒரு நோய், இந்த முடக்குவாதம் எனப்படுகின்ற Rheumatoid Arthritis ஆகும். Methotrexate எடுப்பதனால், உங்களுக்கு புற்றுநோய் இருக்கிறதென்று ஆகாது. இது புற்றுநோய் சம்பந்தப்பட்ட நோய் அல்ல. இந்த Methotrexate மருந்தை எடுப்பதனால் சிறுநீரகம் மற்றும் ஈரல் பாதிக்கப்படுமா என்ற சந்தேகம் பலருக்கு காணப்படுகின்றது.

இதனால் சில பக்கவிளைவுகள் ஏற்படுவது உண்மை தான். ஆனால், இந்த பக்கவிளைவுகள் மிக அரிதாகவே ஏற்படுகின்றது. அதோடு, இவ்விளைவுகள் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. இதனால் தான் இந்த பக்க விளைவுகளை அறிவதற்காக, மாதந்தோறும் குருதி பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இது Monthly monitoring எனப்படும். இந்த பரிசோதனைகளில், உங்களுக்கு அசாதாரண மாற்றங்கள் காணப்படுமாயின், இந்த மருந்தின் அளவை குறைக்க முடியும் அல்லது நிறுத்த முடியும்.

அடுத்ததாக, மருத்துவ முறையில் வலி நிவாரண மருந்து முறை பற்றி பார்ப்போம். இவை Steroids எனப்படும் மருந்துகள் ஆகும். இவற்றால் பல பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

ஆனால், இம்மருந்துகளை பரிந்துரைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஏனெனில், முன்பு கூறிய Disease modifying drugs இன் Effects அதாவது, வினைதிறன் ஏற்படுவதற்கு ஆறு வாரங்கள் தொடக்கம் மூன்று மாதங்கள் வரை காத்திருக்க வேண்டும்.

அந்த காலப் பகுதியிலே வலியை குறைப்பதற்கு இந்த Steroid மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக இந்த மருந்துகள் ஆறு



மாதங்களுக்கு கொடுக்கப்பட்டு, பின்னர் படிப்படியாக மருந்தின் அளவை குறைத்து நிறுத்தப்படுகிறது. அதன்பின், உங்களுக்கு தேவை ஏற்பட்டால் மட்டும் இந்த மருந்துகளை எடுக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது.

அடுத்ததாக, மாதாந்தம் கிளினிக்குக்கு வரவேண்டுமா அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வந்தால் என்ன என்ற சந்தேகம் பலருக்கு காணப்படலாம். முதல் ஆறு மாத காலப்பகுதியில், நீங்கள் மாதாந்தம் கிளினிக்குக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனெனில், மாதந்தோறும் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்.

முதல் ஆறு மாத காலத்திற்கு பின்னர், நீங்கள் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கிளினிக்குக்கு வரலாம். இந்த மாத்திரைகளை எடுப்பதனால், கருத்தரிக்கும் வீதம் குறைவடைகிறதா என்ற சந்தேகமும் பலர் மத்தியில் காணப்படுகின்றது. பொதுவாக இந்த மருந்துகள் கருத்தரிக்கும் வீதத்தை குறைப்பதில்லை. ஆனால், சில மருந்துகளை எடுக்கும் போது நீங்கள் கருத்தரிக்க முடியாது.

சில மருந்துகளை, கருத்தரிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு அல்லது ஒரு வருடத்திற்கு முன்பு நிறுத்த வேண்டும். இதனால், நீங்கள் கருத்தரிக்க வேண்டும் என்று நினைத்தால், வைத்தியரை அணுகி, அதற்கான ஆலோசனைகளைப் பெறுவது இன்றியமையாத ஒன்றாகும்.

அடுத்த சிகிச்சை முறையாக, Non Medical Treatment காணப்படுகின்றது. இதனையும் இரு வகைகளாக பிரிக்கலாம். அவற்றில் முதலாவது, உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகும். இந்த நோய்க்கு, உணவுக் கட்டுப்பாடு அவசியமில்லை. ஆனால், இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அநேகமாக, நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் மற்றும் கொலஸ்திரோல் போன்ற நாட்பட்ட நோய்கள் காணப்படலாம்.

ஆனால், மாச்சத்து உணவுகளை உண்பதை குறைப்பது அல்லது நிறுத்துவது நல்லது. இதனால், உங்கள் உடல் நிறையை குறைத்து, உடற்திணிவு சுட்டெண்ணை சரியான அளவில் பேணக்கூடியதாக இருக்கும். இந்த நோய்க்கு பழவகைகள், மரக்கறி வகைகள் போன்றவற்றை உண்பது சிறந்ததாகும்.

அடுத்த Non Medical Treatment வகையாக, Physio therapy எனப்படும் உடற்பயிற்சி முறை காணப்படுகின்றது. பொதுவாக நோயாளிகள் உடற்பயிற்சி செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள்.

ஆனால், நீங்கள் மருந்துகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ அதேபோல் இந்த உடற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பொதுவாக வலி காணப்படும் போது, physio therapist உங்களுக்கு விசேடமான உடற் பயிற்சிகளை செய்ய சொல்வார்கள். பின்னர், மூட்டுகளிலே வலி குறைந்த பின்னர், மூட்டுக்களுக்கான விசேடமான உடற்பயிற்சிகளை, நாளாந்தம் 30 நிமிடங்கள் தொடக்கம் 1 மணித்தியாலம் வரை செய்வது முக்கியமானதாக இருக்கின்றது. ஏனெனில், இவ்வாறு உடற்பயிற்சி செய்வதன்மூலம் கை மற்றும் கால் மூட்டுகளில் ஏற்படுகின்ற முடக்கங்களை தடுக்கக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே, இந்நோய்க்கான அறிகுறிகள் காணப்படும் போது, உடனடியாக வைத்தியரை அணுகி, தகுந்த சிகிச்சைகளை தகுந்த நேரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல், உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் உடற் பயிற்சிகளை சரியாக பின்பற்றி இந்த நோயினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து, உங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

(முற்றும்)

Dr.A. நாரணி
மூட்டுவாத வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம் 10; த்ரிஷா



**1.** நண்பர்கள் பட்டாளம் பெரியது. மிக நெருங்கிய நட்பு வட்டம் இருக்கிறது. படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் ஹோட்டல், தியேட்டர், ரெஸ்டாரன்ட் எனப் பறந்து கொண்டே இருப்பார். அடிக்கடி ரம்யா கிருஷ்ணன், ஃபேஷன் டிசைனர்-கம்-நண்பர் சிட்னி ஸ்லேடன் இவர் வட்டத்திற்குள் இருப்பார்கள்.

**2.** முன்பு த்ரிஷாவின் நற்பணி மன்றம் கட்-அவுட், பேனர் வைப்பதிலிருந்து நற்பணிகள் வரை சீரும் சிறப்புமாகச் செயற்பட்டது. இப்போது நல்ல படங்களில் நடிப்பதில் மட்டும் ஆர்வமாக இருக்கிறார் த்ரிஷா. ஆனாலும், நற்பணிகள் மட்டும் தொடர்கின்றன. அடிக்கடி அடையார் கேன்சர் இன்ஸ்டிடியூட் சென்று அங்கிருக்கும் குழந்தைகளோடு நேரம் செலவிடுவார்.

**3.** த்ரிஷாவுக்கு அட்வென்சர் விளையாட்டுகளில் ஆர்வம் அதிகம். ஸ்கை டைவிங், பங்கி ஜம்பிங் என பயப்படாமல் விளையாடுவார். வெளிநாட்டுப் பயணங்களில் இவை இடம்பெறுமாறு பார்த்துக் கொள்வார். அவருடன் பயணிக்க ஒரு டஜன் தோழிகளுக்கு மேல் இருக்கிறார்கள். சக நடிகர்கள் அவரை அன்போடு அழைப்பது "ட்ராஷ்." அம்மாவிற்கு எப்போதும் செல்லமாக "த்ரிஷ்!"

**4.** மே 4ஆம் திகதி பிறந்த த்ரிஷா ரிஷப ராசிக்காரர். அசைக்க முடியாத பிடிவாதம் கொண்டவர் என்கிறார்கள். அப்பா செல்லம். அப்பா மறைவுக்குப் பின் அம்மாவைச் செல்லம் கொஞ்சுகிறார். வீட்டில் அம்மாவிற்கு நெருக்கமான பெண். தாயார் உமா, கிட்டத்தட்ட த்ரிஷாவுக்கு நெருக்கமான தோழி போலத்தான்!

**5.** சர்ச் பார்க்கின் முன்னாள் மாணவிதான் த்ரிஷா. யெஸ்... ஜெயலலிதா படித்த அதே பள்ளி. எத்திராஜ் கல்லூரியில் பி.பி.ஏ படித்தார். அதன் பின் சினிமா, சினிமா, சினிமாதான்!

**6.** தெருப்பிராணிகள் மீது மிகுந்த நேசம் உண்டு. வெளிப்புறப் படப்பிடிப்பில் இருந்தால் நாய்களுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். புளூ கிராஸ் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு நிறையப் பிராணிகளுக்கு உதவுவார்.

**7.** தங்க நகைகள் மீது அவ்வளவாக விருப்பம் கிடையாது. பிளாட்டின மோதிரங்கள் மீது தனிப்பிரியம். சிறு வைர நகைகள் அணிவதில் ஈடுபாடு காட்டுவார். வீட்டில் முக்கியமான இடங்கள் பிங்க் நிறத்தில் இருப்பது த்ரிஷாவின் சாய்ஸ். பிங்க் தவிர, பிடித்த நிறம் கறுப்பு.

**8.** த்ரிஷாவுக்கு ஜப்பானிய மற்றும் தாய்லாந்து உணவு என்றால் மிகவும் இஷ்டம். வீட்டில் அனேகமாக சப்பாத்தி, சாண்ட்விச், சாலட், சூப் மட்டும்தான். சாதம் இரண்டு கைப்பிடிதான். எல்லாவற்றிலும் எண்ணெய் மட்டும் குறைவாக இருக்க வேண்டும்.

**9.** தன்னை சினிமாவிற்கு அறிமுகப்படுத்திய இயக்குநர் பிரியதர்ஷன் மீது மிகப்பெரிய அபிமானமும் மரியாதையும் வைத்திருக்கிறார். "லேசா லேசா" மூலம் தமிழிலும் "கட்டா மிட்டா" மூலம் இந்தியிலும் த்ரிஷாவை அறிமுகப்படுத்தியதே அவர்தான்.

**10.** தமிழில் பிடித்த நடிகர் கமல். முன்பு "மர்மயோகி"யில் நடிக்க ஒப்பந்தமாகி அந்தப் படம், நின்றுபோனதால், வருத்தப்பட்டவருக்கு "தூங்காவனம்", "மன்மதன் அம்பு" இப்போது "தக் லைஃப்" வரை கமலுடன் பயணித்திருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அவருக்கு. ஏ.ஆர்.ரஹ்மான் பாடல்கள் எப்போதும் பெருவிருப்பம்!


## சினிமா



"அமரன்" படத்திற்குப் பிறகு தன் சக்சஸ் கிராபில் அக்கறை கொண்டு இப்போது கதைகள் தேர்வு செய்வதில் அதிக நிதானமும் கவனமும் காட்டுகிறார் சிவகார்த்திகேயன். கைவசம் இருக்கும் படங்களை முடித்துக் கொடுத்த பிறகே புதிய படத்திற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடிவெடுத்திருக்கிறார். துப்பாக்கி பத்திரம் சிவா!



விஜய் நடிக்கும் "ஜனநாயகன்" படத்தில் கல்லூரி மாணவியாக நடிக்கும் மமிதா பைஜூவின் கைகளில் வரிசையாகப் படங்கள். கால்ஷீட் கொடுப்பதற்குத் தடுமாறும் அளவுக்கு பிஸியோ பிஸி. கேரளா சினிமா உலகமே அவருடைய வளர்ச்சியைக் கண்டு ஆச்சரியப்படுகிறதாம்.




பிரதீப் ரங்கநாதன், தொடர்ந்து இரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறார். கிடைக்கும் இடைவெளிகளில் ஒரு ஸ்கிரிப்ட்டை உறுதி செய்வதிலும் தீவிரமாக இருக்கிறார். அந்த ஸ்கிரிப்ட்டில், கேமியோ ரோல் மட்டும்தான் பிரதீப்புக்குக்காம். ஹீரோ சான்ஸ் வேறொருவருக்குத்தான். இந்த விடயம் தெரிந்து, அந்த ஸ்கிரிப்டுக்காக ஹீரோ நடிகர்கள் சிலர் குறி வைத்து காய்கள் நகர்த்தி வருவதாகப் பேச்சு.



முதன்முறையாக வெற்றி மாறனுடன் இணைகிறார் சிலம்பரசன். வடசென்னையை மையப்படுத்தும் கேங்ஸ்டர் கதை ஒன்றை இவருக்காக ரெடி செய்திருக்கிறாராம், வெற்றிமாறன். படப்பிடிப்பு இன்னும் சில வாரங்களில் தொடங்கக்கூடும் என்றும் பேச்சு இருக்கிறது.



"இந்தியன் 3" எடிட்டிங் வேலைகளை தொடங்கிவிட்டிருக்கிறார் இயக்குநர் ஷங்கர். இதற்காக அடிக்கடி ஹைதராபாத் சென்று வருகிறார். சில காட்சிகள் படமாக்கப்பட வேண்டியிருப்பதால் லொகேஷன் பார்க்கவும் தான் இந்தப் பயணம் என்கிறார்கள். அநேகமாக இம்மாதக் கடைசியில் "இந்தியன் 3" வுக்கான முன்னோட்ட வீடியோக்களை எதிர்பார்க்கலாம்.



பி.எஸ்.மித்ரனின் இயக்கத்தில் கார்த்தி நடித்து வரும் "சர்தார் 2"வின் முக்கியமான சண்டைக் காட்சிகளை சமீபத்தில் தாய்லாந்தில் படமாக்கித் திரும்பியுள்ளனர். மொத்தப் படப்பிடிப்பும் நிறைவடைந்திருப்பதால், தீபாவளிக்குத் திரையிடத் திட்டமிட்டுள்ளார்களாம். கார்த்தி நடிப்பில் உருவாகிவரும் "வா வாத்தியார்" படத்திற்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே படப்பிடிப்பு நடத்த வேண்டியுள்ளது. அதனால், அதை முதலில் முடித்து, வெகு விரைவில் ரிலீஸ் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நிதியத்தினால்
## மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2023/ 24 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களைக் கௌரவிக்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் இன்று இடம் பெறவுள்ளது.

2023/24 க. பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் ஒரு மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 60 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் நிதிப் புலமைப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மாகாண ரீதியில் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் முதல் நிகழ்வு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதுடன். 2023 ஆம் ஆண்டு க. பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதன் போது கௌரவிக்கப்படவுள்ளனர். (8)

# குடியிருப்புகளுக்கான ஆதனவரி 8 சதவீதமாக குறைக்கப்படும்
## வவுனியா மாநகர முதல்வர்

(வவுனியா)

வவுனியா மாநகர சபைக் குட்பட்ட குடியிருப்புகளுக்கான ஆதனவரியை 8 சதவீதமாக குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், குடியிருப்பை தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு 10 சத வீதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மாநகரத்திற்குட்பட்ட மக்கள் தங்களது முறைப்பாடுகளை இலகுவாக வழங்குவதற்காக வட்சப் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் தங்களது பிரச்சினைகளை குறுந்தகவல்கள் மூலமாக அனுப்பினால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

071 324 7247 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் பொதுமக்கள் 24 மணித்தியாலமும் எம்மை தொடர்பு கொள்ள முடியும். யூலை 1 ஆம் திகதி முதல் அந்த நடவடிக்கை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படும். மூன்று மொழிகளிலும் குறித்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கையையும் எடுத்துள்ளோம்.

அத்துடன், எமது சபைக் குட்பட்ட பகுதியில் தனியான தீயணைப்பு பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கவுள்ளோம். அது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம்.

அதேபோல அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கான சிறந்த பொதுவான ஒரு பாதீட்டை இம்முறை சமர்ப்பிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

# சுமார் 70 வருடங்களின் பின் வீதி புனரமைப்பு ஆரம்பம்!

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் ஏழாம் யூனிட் பகுதியில் அமைந்துள்ள வீதி, கடந்த 70 வருடங்களுக்கு மேலாக மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தது

இந் நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் வீதிப் புனரமைப்பு பணிகள் 35 மில்லியன் ரூபா செலவில் தார் வீதியாக நிரந்தரமாக அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் சம்பிரதாயபூர்வமாக இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மோகன் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர், கண்டாவளைப் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கிராம மக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். (8-316-315)


# கதிர்காமக் கந்தனுக்கு மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த திருவிழா உற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய உள்ளது

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை காட்டுப் பாதை வழியாக பாதை யாத்திரை மேற்கொண்டு பயணத்தை ஆரம்பித்துள்ளனர். பக்தர்களுக்காக அமைந்துள்ள லகுகலை-உகந்தைவனப் பாதையின் கதவு நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் உகந்தை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டிற்குப் பிறகு திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

# மாணவர் பாராளுமன்றத் தேர்தல்



(வவுனியா)

வவுனியா தெற்கு வலய மாணவர் பாராளுமன்ற தெரிவு, இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் மூலம் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணமனையின் கேட்போர் கூடத்தில் சமூக விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சத்தியமூர்த்தி தலைமையில் குறித்த நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவன் ச.கபிலாஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் மூலம் வலய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிற்கான வாக்களிப்பு இடம்பெற்றது.

இதில் பிரதி கல்விப் பணிப்பாளர்களான அமல்ராஜ், தட்சாயினி, வீரசிங்கம், வலய கணக்காளர், சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சுபா, சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

# தரிசு நிலங்களை- பயிர் நிலங்களாக மாற்றும் நிகழ்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு பகுதியில் தரிசாக உள்ள நிலங்களில் பயிர் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்த விவசாய அமைச்சர் கே.டி லாந்காந்த திருவையாறுப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

உணவினால் பாதுகாக்கப்பட்ட தேசத்தை உருவாக்கும் பொருட்டு "பியவலவு கம நிலத்திற்கு" என்ற தொனிப் பொருளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இந் நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப் பினர் கருணநாதன் இளங்குமரன், கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகம் திரு. யு.பி ரோகண ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்து கொண்டு பல வருடமாக பயிர் செய்யாது காணப்பட்ட நிலத் தினை சம்பிரதாயபூர்வமாக நிலக்கடலை விதைத்து ஆரம்பித்து வைத்தனர். (நி-8-316-315)

# போசாக்கான உணவுகளை உண்போம்



(யாழ்ப்பாணம்)

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கான உணவுகளை உண்ணும் பழக்கத்தை வலுப்படுத்தும் முகமாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இணைந்து ஏற்பாடு செய்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்/சித்தி விநாயகர் இந்து கல்லூரியில் இடம் பெற்றது

"பழங்களும் மரக்கறிகளும் எப்போதும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும் எனும் தொனிப் பொருளில்" இடம் பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் சித்திவிநாயகர் இந்து கல்லூரியின் மாணவ மாண வியர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

இலங்கையில் ஆண்டு தோறும் அதிகரிக்கும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்கான ஆரோக் கியமான உணவு பழக்கவழக்கம் மற்றும் அன்றாட உணவுகளில் தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் விதமாக குறித்த விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

அதே நேரம் சுகாதார உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட உடலுக்கு தீங்கிளைக் காத சிற்றுண்டி பரிமாறப்பட்டத்துடன் அன்றாட உணவு பழக்கங்களில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பிலான மேடை நாடகமும் மாணவர்களுக்கு காட்சிப் படுத்தப்பட்டது . (8-285)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக காத்திருந்தோர் மீது ஈவிரக்கமற்று குண்டு வீச்சு!

## 50 பேர் காசாவில் கொடூரமாக உயிரிழப்பு

(காசா)

**காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உணவுப் பொருட்களுக்காக காத்திருந்தவர்கள் உட்பட சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



மத்திய காசாவின் நெட்ஸாரிம் பகுதிக்கு அருகே நிவாரணப் பொருட்களை வாங்குவதற்காக ஏராளமானவர்கள் குழுமியிருந்தனர்.

அவர்களை நோக்கி இஸ்ரேல் படையினர் சுட்டதில் 35 பேர் உயிரிழந்ததாக அல்-அவ்தா மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இது தவிர, ஒரு குடியிருப்பின் மீது இஸ்ரேல் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த 43 பேருடன் சேர்த்து, காசா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் சுமார் 50 பேர் உயிரிழந்ததாக மருத்துவமனைகள் வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

சுமார் மூன்று மாதங்களாக நீடித்த முற்றுகை காரணமாக காசாவில் பஞ்சம் ஏற்பட்டு, ஏராளமானவர்கள் பட்டினிச் சாவுக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டது.

இதையடுத்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக குறைந்தபட்ச அளவிலான நிவாரணப் பொருட்களுக்கு அனுமதி அளிக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

காசாவில் வழக்கமாக நிவாரணப் பொருட்களை விநியோக்கும் ஐ.நா. பிரிவுக்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளதால், அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்படும் காசா மனிதாபிமான அறக்கட்டளை கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் அந்தப் பணியை மேற்கொண்டுவருகிறது.

இருந்தாலும், விநியோக மையங்களுக்கு வருவோர் மீது இஸ்ரேல் படையினர் நடத்தும் துப்பாக்கிச்சூட்டில் இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உணவின்றி மண்ணை சாப்பிடுகின்றோம்! உலகை உலுக்கிய காசா சிறுவனின் காணொளி



(காசா)

காசாவில் உணவு கிடைக்காமல் தவிக்கும் சிறுவன் பேசும் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

குறித்த காணொளியில் கருத்து தெரிவித்த சிறுவன், "காசாவில் நாங்கள் சாப்பிட உணவு எதுவும் இல்லை.

ஒவ்வொரு நாளும் உணவு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய ட்ரக்குகள் காசாவுக்குள் வருகின்றன ஆனால் அதில் எங்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை.

நாங்கள் உணவு இல்லாமல் மண்ணை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

எங்குமே உணவு இல்லை, எங்களுக்கு உணவு சமைக்க மாவு தேவை, எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்.

தயவுசெய்து கருணை காட்டுங்கள், நாங்கள் ரொட்டிக்கு பதிலாக மண்ணை சாப்பிடுகிறோம், தயவு செய்து இரக்கம் காட்டுங்கள்" என கண்கலங்கியபடி தெரிவித்துள்ளார்.

காசாவில் தற்போது ஒரு ரொட்டித் துண்டின் விலை 5.30 டொலர் என ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், அந்த ஒரு ரொட்டித் துண்டும் மிகவும் சிறியது எனவும் அதுவும் எங்களுக்குப் போதவில்லை எனவும் சிறுவன் காணொளியில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஈரானில் நிலநடுக்கம்

(வோஷிங்டன்)

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் ஈரானை தொடர்ந்து தாக்கிவரும் நிலை யில் வடக்கு ஈரானில் 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் செம்னான் நகரிலிருந்து தென் மேற்கே சுமார் 37 கிலோமீற்றர் (23 மைல்) தொலைவில் 10 கிலோமீற்றர் (ஆறு மைல்) ஆழத்தில் ஏற்பட்டுள்ளது. (நி)

# உலகத்தை உலுக்கும் கூட்டணி ரஷ்யாவுக்காக போர்க்களத்தில் குதிக்கும் வடகொரியா





(பியாங்யாங்)

உக்ரைனுக்கு எதிரான போரில் சேதமடைந்துள்ள ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியை மீண்டும் கட்டமைக்க பொறியியலாளர்கள் மற்றும் இராணுவ ஊழியர்கள் என ஆறாயிரம் பேரை அனுப்ப வடகொரியா முடிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைன் மீது நீண்ட நாட்களாக ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வர நடந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கத்திய நாடுகள் உள்ள நிலையில் ரஷ்யாவுக்கு ஆதரவாக சீனா உள்ளிட்ட சில நாடுகள் செயற்படுகின்றன.

இந்த போரில் இரு நாடுகளிலும் ஏராளமானோர் உயிரிழந்துள்ளதுடன் பல இடங்களில் சேதம் ஏற்பட்டு உள்ளது. இந்த போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக வட கொரியா செயற்படுகின்றது அத்தோடு, அந்நாட்டை சேர்ந்த வீரர்கள் ரஷ்யா உடன் இணைந்து போரிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியை கட்டமைக்கும் பணியில் அந்நாட்டிற்கு உதவ ஆயிரம் இராணுவ பொறியியலாளர்கள் மற்றும் ஐந்தாயிரம் இராணுவ ஊழியர்களை அனுப்பி வைக்க வட கொரியா முடிவு செய்துள்ளது.

இதனை ரஷ்யா அரசு உறுதி செய்துள்ளதுடன் அவர்கள் உக்ரைன் இராணுவத்தால் சேதப்படுத்தப்பட்ட பகுதிகளை கட்டமைப்பார்கள் எனவும், உக்ரைன் தாக்குதலில் உயிரிழந்த வடகொரியா வீரர்களுக்கு ஆதரவாக நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யுத்தத்தின் தீப்பிழம்புகளை மேலும் எரியூட்டும் மேற்குலகம்

## வடகொரியா சீற்றம்



(பியாங்யாங்)

இஸ்ரேல் தற்போது மத்திய கிழக்கில் புதிய யுத்தம் மூளும் ஆபத்தை உருவாக்கியுள்ளது எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலை அமைதியை பாதிக்கும் புற்றுநோய் என வர்ணித்துள்ள வடகொரியா சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சர்வதேச குற்றவாளி இஸ்ரேல் என தெரிவித்துள்ளது. ஈரானின் சட்டபூர்வ இறையாண்மை உரிமை பற்றி பேசுவதன் மூலம் அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் யுத்தத்தின் தீப்பிழம்புகளை மூட்டிவிடுகின்றன என தெரிவித்துள்ள வடகொரியா ஈரான் பாதிக்கப்பட்ட நாடு எனவும் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தோல்விகளுக்கு இடையில் தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன அதனால் தோல்விகளைக் கண்டு அஞ்சாதே.
> ~ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலாகாலமாகக் கூறுவது எந்தவகையில் நியாயம்

சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கு மூல காரணமாக இருந்தது அவரின் தேர்தல் பிரசாரம்.

ஆம், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என அவர் மேற்கொண்ட தேர்தல் பிரசாரம் அவரை ஜனாதிபதியாக்கியது.

தேர்தல் பிரசாரத்தில் அவர் கூறியது போல இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட ஒரே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பதையும் இங்கு கூறித் தானாக வேண்டும்.

உண்மை. சந்திரிகா குமாரதுங்க முதலாவது தடவை ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விசேட தூதுக்குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார்.

பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும் காலப்பிழை போல இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியவில்லை.

ஆயினும் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட ஒரு தரமான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தவர் என்ற பெருமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையே சாரும்.

இவ்வாறானதொரு தீர்வுத் திட்டத்தை அவர் கொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகளின் முப்படைப் பலம் காரணமாக இருந்ததென்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் சந்திரிகா குமாரதுங்கவுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் எனத் தேர்தல் பிரசார மேடைகளில் கூறியிருந்தாலும் அவர்களிடம் தீர்வு காணுகின்ற மனநிலை இம்மியும் இருக்கவில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த நிலையில், இப்போது அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அவரின் அரசாங்கம் உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது பதவியேற்பின்போது கூறியிருந்தார்.

இப்போது புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறப்படுகிறது. எனினும் அதற்கான வேலைத்திட்டம் எந்த மட்டில் உள்ளதென்பது தெரியவில்லை.

எதுஎவ்வாறாயினும் இப்படியே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் காலாகாலமாகக் கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது என்பது புரிதற்குரியது.

### மனித உரிமை மீறல்களுக்கு

# இலங்கை அரசாங்கம் தீர்வு காண வேண்டும்

## ஒக்லாந்து நிறுவகம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் நில அபகரிப்புகள் மற்றும் தமிழர்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்களிற்கு இலங்கை அரசாங்கம் உரிய தீர்வை வழங்குமாறு ஐ.நா அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என ஒக்லாந்து நிறுவகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கெர் டேர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவ்நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பல வருடங்களாகின்ற போதிலும் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது முதல் ஒடுக்கு முறைக்குள்ளான புறக்கணிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கின்றார்கள்.

பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பை மனித உரிமை ஆணையாளரின் விஜயம் வழங்குகின்றது.

கடந்த மாதம் பல சிறுவர்களின் உடல்கள் உட்பட 19 பேரின் மனித எச்சங்கள் காணப்பட்ட மனிதப்புதைகுழி இலங்கையின் வடக்கில் யாழ். நகரத்திற்கு அருகிலுள்ள செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் பல தசாப்தங்களாக தண்டனை விடுபாட்டுரிமை, அவற்றை விசாரணை செய்யத் தவறியமை போன்றவை காணப்பட்டதால், மனிதப் புதைகுழியை தோண்டும்போது சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்ற காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்களின் வேண்டுகோள்களுடன் ஒக்லாந்து நிறுவகம் இணைந்து கொள்கின்றது.

நிலைமையை முழுமையாக மதிப்பிடுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளிற்கும் விஜயம் மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் தையிட்டியில் படையினரின் சட்டவிரோத விகாரைகளிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. தமிழர்களின் வரலாற்றை, கலாசாரத்தை அழிப்பதற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவரும் திட்டமிட்ட தந்திரோபாயம் இதுவாகும்.

ஒக்லாந்து நிறுவகம் ஆவணப்படுத்தியுள்ளது போல தங்கள் நிலங்கள் காலணித்துவம் செய்யப்படுவது தொடர்வதால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வீடுகள் நிலங்களில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

நீர்ப்பாசனத் திட்டங்கள், இராணுவ குடியேற்றங்கள், தொல்பொருள் ஒதுக்கீடுகள், சரணாலயங்கள், பௌத்தமயமாக்கல் போன்றவற்றின் மூலம் வடக்குக் கிழக்கைப் பிரிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்கின்றன.

இலங்கையிலும் புலம்பெயர்ந்த தேசங்களிலும் பொறுப்புக்கூறல் நீதிக்கான தமிழ் மக்களின் தடையற்ற அர்ப்பணிப்பு- இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் அழுத்தங்களை பேண உதவியுள்ளது.

ராஜபக்ஷ யுகம் முடிவிற்கு வந்துள்ள போதிலும் ஜனாதிபதி திஸாநாயக்கவின் அரசாங்கம் முன்னைய ஆட்சியாளர்களின் கொள்கைகளையே பின்பற்றுகின்றது.

கருத்து சுதந்திரத்தை பயன்படுத்தியமைக்காக பொதுமக்களை தன்னிச்சையாக தடுத்துவைப்பதற்கு மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

சர்வதேச மனித உரிமை மனிதாபிமான சட்டங்களை மீறியமைக்காகவும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களிற்காகவும் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலிற்குட்படுத்தப்பட வேண்டும்.

இராணுவமயப்படுத்துதலை நிறுத்த வேண்டும், களவாடிய நிலங்களை மீளக் கையளிக்க வேண்டும், வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்ற வேண்டும் என அதற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் நீண்டகால துயரங்களிற்கு தீர்வைக் காண நம்பகத்தன்மை மிக்க உண்மையைத் தெரிவிக்கும் நடைமுறை, நீதி, இழப்பீடு, அரசியல் தீர்வு போன்றவற்றை வழங்குவது அவசியமானது என ஒக்லாந்து நிறுவகம் தெரிவித்துள்ளது. (நி)

## வேகக் கட்டுப்பாட்டையிழந்து தடம் புரண்டது பேருந்து

### மூவர் பலி; பலர் படுகாயம்

(பதுளை)

அநுராதபுரம், தம்புத்தேகம பிரதேசத்தில் இருந்து பதுளை பகுதிக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து வண்டியொன்று நேற்று(21) சனிக்கிழமை மாலை மகியங்கனை வீதி 4ஆம் கட்டைப் பகுதியில் தடம்புரண்டு விபத்திற்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தின் காரணமாக குறித்த பேருந்தில் பயணித்த 35 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் மூவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு பொறுப்பான மருத்துவர் பாலித்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து குறித்து பதுளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பேருந்தை செலுத்திய சாரதியினால் பேருந்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்து ஏற்படக் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின் கம்பத்தின் மீது மோதிய உழவு இயந்திரம்

யாழ்ப்பாணம் அராலி மத்திய பகுதியில் நேற்று உழவு இயந்திரமொன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு சொந்தமான குறித்த உழவு இயந்திரத்தில் வாடிக்கையாளர் ஒருவருக்கு பொருட்களை ஏற்றிச் சென்ற வேளை வீதியோரமாகச் சென்று கொண்டிருந்த மாடுகள் திடீரென வீதிக்கு குறுக்கே பாய்ந்துள்ளன.

இதனை சாரதி சற்றும் எதிர்பார்த்திராத நிலையில் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது மின் கம்பம் குறித்த உழவு இயந்திரத்தின் மீது சரிந்த போதிலும் தெய்வாதீனமாக சாரதி எவ்வித மான காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

விபத்தினால் சேதமடைந்த மின் இணைப்புக்களைச் சீர்செய்யும் பணியில் வட்டுக்கோட்டை மின்சார சபையினர் ஈடுபட்டனர். (ம-7,104)

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் குருநாகலில் ஒருவர் கைது

(தித்தவெல்ல)

குருநாகலில் தித்தவெல்ல பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கும்புக்கெடே பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கும்புக்கெடே பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசகம் பெறும் சிறுவர்களை தேடி வலைவிரித்த பொலிஸார்

(கொழும்பு)

யாசகம் மற்றும் பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபடும் சிறுவர்களைத் தேடி கடந்த வியாழக்கிழமை விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, யாசகம் மற்றும் பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபடும் 21 சிறுவர்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சிறுவர்கள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு , நுகேகொடை , கம்பஹா, பாணந்துறை, களனி, நீர் கொழும்பு, கல்கிஸ்ஸை, களுத்துறை, தங்காலை, அநுராதபுரம், கண்டி, குருணாகல், சிலாபம், இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளை இலக்கு வைத்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கை நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மேற் கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(நி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
23 - 04 - 1956

மறைவு
24 - 05 - 2025

கடந்த 24.05.2025 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர். **சரவணமுத்து சந்திரராசா** அவர்களின்

வீட்டுக்கிருத்திய கிரியை 23.06.2025 நாளை திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் இப் பிரார்த்தனை நிகழ்வில் தாங்கள் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

**மனமுருக நன்றியுரை**

எங்கள் குடும்பத்தின் தூணாக இருந்த என் அன்புத் தந்தையின் மரணம் எங்களுக்குப் பேரிழப்பாகும். இந்தத் துயரத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது அத்துடன் என் தந்தையின் கடைசி தருணங்களில் தங்கள் மனிதநேயத்துடன், தொலை நோக்குடனும், நேரத்தையும் அர்ப்பணித்து மருத்துவ சேவையளித்த யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் மருத்துவக் குழுவிற்கும், சாவகச்சேரி வைத்தியசாலை மருத்துவ குழுவிற்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.தந்தையின் இறுதி கிரியையில் எங்களுக்காக நேரம் ஒதுக்கிய, தோளோடு துணை நின்று வார்த்தைகளாலும் செயல்களாலும் ஆதரவு வழங்க ஓடோடி வந்து உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், என் தந்தையின் நண்பர்கள்,கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்கள், அஞ்சலி செய்தோர், நினைவுக் கவிதை எழுதியோர், உள்நாட்டு ,வெளிநாட்டில் இருந்து தொலைபேசி, இணையத்தளங்களில் இருந்து ஆறுதல் வார்த்தை கூறியோர் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து நெருக்கமானவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.உங்கள் ஆறுதல் வார்த்தைகள் மற்றும் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்த நினைவுகள் எங்களுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. உங்களின் ஒவ்வொரு செயலும் எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும். இதயம் நிறைந்த நன்றி.

(சி-3237)

அல்லாரை தெற்கு.
மீசாலை.

தகவல்- குடும்பத்தினர்.
077 365 6907



## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு- **076 682 7368**

No.139, Main Street Jaffna.

யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)

(4598)



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்-நயினாதீவு



### உயர் திருவிழா-2025 அறிவித்தல்

**கோவிலில் வருடாந்த உயர்திருவிழா 26.06.2025 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.07.2025 ஆம் திகதியன்று தெப்போற்சவத்துடன் நிறைவு பெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.**

**உயர்திருவிழாக் காலத்தில் நிதி வசூலிப்பதற்கென தனிநபரிடமோ, பொது அமைப்புக்களுக்கோ அனுமதி கோவிலினால் வழங்கப்படவில்லை. எனவே அடியவர்கள் அம்பாளுக்கு நிதி செலுத்துவதாக இருந்தால் கோவிலின் வங்கி கணக்கு இலக்கங்களான**

**இலங்கை வங்கி:- 7687860/ 86645863**

**வர்த்தக வங்கி:- 1060012330**

**என்பவற்றில் வைப்புச் செய்யலாம் அல்லது தபால் மூலம் அனுப்புவதாக இருந்தால் பொருளாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாக ஆலயத்திற்கு வருகை தந்து செலுத்தலாம் என்பதனை அடியார்களுக்கு அறியத்தரு கின்றோம்.**

நன்றி

(சி-3234)

**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு.**

**021 432 3440, 021 432 3447**


# இராசிபலன்

22.06.2025
ஆனி 08, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 11.33 மணிவரை

பரணி பிற்பகல் 4.00 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்-அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**கடகம்**
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**
நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்**
பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்படநேரிடலாம்,பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், திடீர்க் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்**
சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், எதிர்பாராக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.

**கும்பம்**
தைரியமும் தன்னம்பிக்கையும் உயரும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்,உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.

**மிதுனம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணவரவு எதிர் பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி**
மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**தனுசு**
உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வார்த்தையில் நிதானம் தேவை, செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.

**முயற்சி செய்து தோல்வியிலும் முத்திரை பதிக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹண்டர்...

காமையில் மோட்டார் சைக்கிளை ஹண்டர் வாகனம் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டி வதிரி தம்பியோடையைச் சேர்ந்த கந்தையா சிதம்பரநாதன் (வயது- 76) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

உடுப்பிட்டி - வதிரி வீதி ஊடாக வேகமாகச் சென்ற ஹண்டர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

### தன நிதானய

திகதி - 2025.06.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1897
V 03 12 19 20 V
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance 79262

### மெகா பவர்

திகதி 21/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2215
V 17 11 36 53 59
Double Chance

### ஜய ஜய (JAYA)

திகதி 2025.06.21
சீட்டிழுப்பு இலக்கம் 0135
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
P 5 9 7 0

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4109
சீட்டிழுப்பு திகதி 21.06.2025
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 03 06 46 61
U

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.21
சீட்டிழுப்பு இலக்கம் 1176
மேடம் 19 25 30 38 மேடம்
தன யோக இலக்கம் 37523 | நாளுக்கான விதி எண் 20

### மஹஜன சம்பத

திகதி 2025.06.21
சீட்டிழுப்பு இலக்கம் 5867
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
A 4 1 4 8 0 6

அத சம்பத
A 4 8 0 6
சீட்டிழுப்பு இலக்கம் 442
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2841
சீட்டிழுப்பு திகதி 2025.06.21 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 24 27 32 73 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,812,108.80

### சசிரி

வெற்றி வாரம் 709
சீட்டிழுப்பு திகதி 21.06.2025 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 | 26 | 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

### லக்பிம (DLB)

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 34 02 37 56 57
சீட்டிழுப்பு வாரம் 2017
திகதி 21.06.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,927,025.80

### சுபிரி தன சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.06.2025 | வெற்றி வாரம் 575
ஆங்கில எழுத்து J | மற்றும் வெற்றி இலக்கம் 2 4 7 4 1 0
94729
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,653,683.60

### சனிதா

திகதி 21.06.2025 | வெற்றி வாரம் 5002
வெற்றி இலக்கங்கள் 08 34 48 79 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,722,210.80
ரூ. 50,000/- பணப்பரிசு 55082


### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4553
சீட்டிழுப்பு திகதி 21.06.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 37 51 62 | தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,045,294.40
219065

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2667
சீட்டிழுப்பு திகதி : 2025.06.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,847,200.00
வெற்றி இலக்கங்கள் 19 38 39 65 K
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 756826

# மரண அறிவித்தல்



## அமரர் இராமநாதன்
## தவில் இளவரசு தர்சீலன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 .04 .1988 | 21.06 .2025 |

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் தர்சிலன் அவர்கள் நேற்று (21.06.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வட்டூர் தவில் வித்துவான் இராமநாதன் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கஜிதா அவர்களின் அன்புக் கணவரும் N.R.தர்ஷன், N.R.தர்ஷனன், N.R.தர்ஷராகவன், N.R.சிவசாகித்தியன், N.R.குகவர்த்தனன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை. (4608)

தகவல் : குடும்பத்தினர்
077 632 3041
077 491 4179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி - சங்கத்தானை

# அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி கோவில்

## விசுவாவசு வருஷ திவ்விய மகோற்சவப் பெருவிழா – 2025


## சப்பைரதத் திருவிழா

**காலம் : 23.06.2025(திங்கட்கிழமை)**

**நேரம் : இரவு 7.00 மணி**

விசேட மங்கள வாத்திய நிகழ்வுகள் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் சப்பைரதத் திருவிழாவில் கலந்துகொண்டு முருகப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இங்ஙனம் : 10 ஆம் திருவிழா, சப்பைரத உபயகாரர்கள்

(4589)

---

SKYACADEMY

In Jaffna

# ENGLISH CLASSES ADMISSION

NOW OPEN FOR REGISTRATION

Classes Start in July!

CLASS LEVELS:
- Grade 1 to 5

Classes conducted by:
Yashodha Piumali



**Enrol Now**

www.skyacademy.lk
VISIT OUR WEBSITE

Call Us
+94 77 922 4514

No. 460, Navalar road, Jaffna.

(1245)

---

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Special offer 50% Discount to all the Courses**

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(4455)

---

## கனடா - வரி இல்லாமல்

## விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3960/- |
| 11-16 Kg | 2790/- |
| 21-30 Kg | 2650/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

(C-3241)

---

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு

லேத் வேலை தெரிந்தவர்கள் தேவை.

வெல்டிங் வேலை தெரிந்தவர் தேவை.

**075 737 8191**

**021 224 5057**

(4576)

---

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

தேவை

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.

**077 729 2840**

(C-3242)

---

# Board of Directors of Jaffna College

Vaddukodai

## VACANCY

## Post of Principal of Jaffna College

Applications are invited from suitable candidates for the above post. The applicants must meet the following requirements:

- A degree from a university recognized by the University Grants Commission of Sri Lanka with a postgraduate qualification. Applicants with high academic achievements in related fields will have an added advantage.
- A minimum of ten years of secondary school teaching experience.
- Be a communicant member of a church belonging to the National Christian Council of Sri Lanka.
- Excellent leadership qualities and calibre to command the respect of the community.
- Maintaining open communication with students, staff, parents and alumni; and liaising with national education authorities.

**Salary is negotiable. Residential facilities are provided within the school premises.**

All applications must be submitted through **both registered post and email.** This dual submission ensures proper documentation and timely receipt. Candidates are advised to send their complete application along with all required enclosures **on or before the 22nd of July 2025** to the following:

**Postal address :** Convener,
Selection Committee,
Jaffna College, Vaddukodai.

**Email address:**
seco.bdjc2025@gmail.com

Only shortlisted candidates will be called for the interview.

**Convener,**
**Selection Committee of the Post of Principal**
**Board of Directors of Jaffna College, Vaddukodai.**

(4563)

---

# காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.

காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்புகளுக்கு:

**076 755 8606**

**077 861 5247**


(4563)

---

# Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -218/= |
| 1Kg Prima கோதுமை மா | -158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | -254/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | -399/= |
| 1Kg றவை | -290/= |
| 1Kg வெள்ளை நாடு அரிசி | -230/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | -215/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | -240/= |
| 10Kg விஜிதா | -2800/= |
| 1Kg மல்லி (M) | -355/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | -759/= |
| 1Kg சம்பா அரிசி | -238/= |
| 1Kg கடலை | -385/= |
| 1Kg சோயா | -350/= |
| 01 பெல்வத்த யோக்கட் | -42/= ~~70/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket 0777 8080 30

(1251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.